
தர்மசக்கரம்



குரோதன ௵ புரட்டாசி ௴ சக்கரம் 34 ஆரம் 9

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதியில் அந்தர்யோகம்

சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதியில் அக்டோபர் மாதம் 14, 15, 16 ஆகிய மூன்று நாட்கள் சக்தி பூஜை அந்தர்யோகம் ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்தில் நடைபெறும். இதில் கலந்துகொள்ள விரும்பும் தாய்மார்கள் மட்டும் அக்டோபர் மாதம் 13ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவே நேரில் வந்து நாள் ஒன்றுக்கு ரூபாய் 9-00 வீதம் ரூபாய் 27-00 மட்டும் உணவுக்காகச் செலுத்திப் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளவேண்டும். அமைதியைக் காக்க 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுமிகளும் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை	மணிமுதல்	மணிவரை	மாலை	மணிமுதல்	மணிவரை
துயிலெழுதல்	4-30		ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம விளக்கவுரை	3-00	3-45
நாமஜபம்	5-00	5-30	நாம ஜபம்	4-00	4-30
ஸ்நானம்	6-00	7-30	சிற்றுண்டி	4-30	
ஆரதி	7-30		ஸ்ரீலலிதா ஸஹஸ்ர நாம அர்ச்சனை, ஆரதி, பிரார்த்தனை	6-00	7-00
சிற்றுண்டி	7-45		தியானம்	7-00	7-30
பஜனை	8-30	9-30	உணவு	7-45	
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம விளக்கவுரை	10-00	11-00	ஸத் ஸம்பாஷணை	8-30	9-30
அர்ச்சனை	11-30	12-30			
உணவு, ஓய்வு	1-00	3-00			

குறிப்பு:- 1. அக்டோபர் 14, 15 ஆகிய இரண்டு தினங்களிலும் ஸ்ரீ ஸாரதா கல்லூரி பிரார்த்தனைக் கொட்டகையிலும், அக்டோபர் 16ஆம் தேதி ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்திலும் காலை 10-00 மணி முதல் 11-00 மணி வரை ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்களால் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம விளக்கம் நடைபெறும். இவைகளில் அன்பர்களும் கலந்துகொள்ளலாம். மேற்படி மூன்று தினங்களிலும் மாலை 3-00 மணி முதல் 3-45 மணிவரை ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்தில் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம விளக்கவுரை யதீஸ்வரிகளால் நடைபெறும். இவைகளில் தாய்மார்கள் மட்டும் கலந்து கொள்வார்கள்.

2. ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்தில் அக்டோபர் 16ஆம் தேதி மாலை அர்ச்சனை 4-30 மணி முதல் 5-30 மணிவரை நடைபெறும். அன்று மாலை 6-00 மணிக்கு ஸ்ரீ ஸாரதா கல்லூரியில் ஸ்ரீ ஸாரதா ஸ்தாபனங்களின் மாணவிகளால் கலாநிகழ்ச்சிகள் நடைபெறும். அன்பர்களும் இதில் கலந்துகொள்ளலாம்.

இங்ஙனம்

யதீஸ்வரி சாரதாப்ரியா

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 34	குரோதன ஹு புரட்டாசி மீ	ஆரம் 9

பொருளடக்கம்

வருட சந்தா :	உள்நாடு	ரூ. 15-00	வெளிநாடு	ரூ. 45-00
தனி இதழ்	,,	ரூ. 1-50	,,	ரூ. 4-00

அந்தர்யோக விவரங்கள்

திருநெல்வேலி மாவட்டம்—கொமடிக்கோட்டையில் 18—9—85 புதன்

இடம்: அருள்மிகு பாலகுரு சுவாமி திருக்கோவில்
நேரம்: மாலை 7-00 மணிமுதல் 10-00 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—பாளையங்கோட்டையில் 22—9—85 ஞாயிறு

இடம்: ஸ்ரீதிரௌபதி அம்பாள் கோவிலோடு இணைந்த பாப்புலர் சோமசுந்தரி அம்மாள் டிரஸ்ட் திருமண மண்டபம், 54 சிவன் தெற்குரதவீதி
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

சேலம் மாவட்டம்—மல்லசமுத்திரத்தில் 22—9—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: செங்குந்தர் திருமண மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

காமராஜ் மாவட்டம்—விருதுநகரில் 22—9—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பெரிய காளியம்மன் கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் 12-00 மணிவரை
மாலை 5-00 மணி முதல் 7-30 மணி வரை ஸ்ரீ லலிதா சஹஸ்ர நாம அர்ச்சனை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

மதுரை மாவட்டம்—லாலாபுரத்தில் 22—9—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-00 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி போதானந்தர்

மதுரை ஜில்லா—தேனியில் 25—9—85 புதன்கிழமை

இடம்: ஸ்ரீ கணேச கந்தபெருமாள் ஆலயம் தியாகராஜநகர்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

திருச்சி ஜில்லா—ஸ்ரீரங்கத்தில் 29—9—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீரங்கம் ரயில்வே ஸ்டேஷன் பஸ்ஸ்டாப் அருகில் உள்ள தோப்பில் இருக்கும் ஸ்ரீ அன்ன காமாக்ஷி அம்மன் கோவில்
நேரம்: மாலை 6-30 மணி முதல் இரவு 8-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—சுருளிமலையில் 2—10—85 புதன்கிழமை

இடம்: சுருளி தீர்த்தத்துக்கு அருகில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 6—10—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: விவேகானந்த கல்லூரி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 2-00ம் மாலைச் சிற்றுண்டிக்கு ரூ. 1-50ம் நேரில் [செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

சென்னை—கோபாலபுரம் லாயிட்ஸ் சாலையில் 6—10—85 ஞாயிறு

இடம்: D. A. V. ஹையர் செகண்டரிபள்ளி (ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த தயானந்த வேதிக் ஸ்கூல்)
நேரம்: காலை 10-30 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி மாவட்டம்—முக்காணியில் 6—10—85 ஞாயிறு

இடம்: அருள்மிகு அம்பாள் திருக்கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-00 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

கோவை ஜில்லா—கேத்தனூரில் 12—10—85 சனிக்கிழமை

இடம்: ஸ்ரீ பெருமாள் கோவில்
நேரம்: இரவு 7-00 மணிமுதல் 9-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—செங்குட்டைப் பாளையத்தில் 13—10—85 ஞாயிறு

இடம்: சுவாமி சித்பவானந்த கிராம சேவா சங்கம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—புளியம்பட்டியில் 13—10—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: புளியம்பட்டி
நேரம்: இரவு 7-00 மணிமுதல் 9-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 34	குரோதன ௵ புரட்டாசி ௴	ஆரம் 9

பிரார்த்தனை

गेयं गीतानामसहस्रं ध्येयं श्रीपतिरूपमजस्रम् ।
नेयं सज्जनसङ्गे चित्तं देयं दीनजनाय च वित्तम् ॥
भजगोविन्दं ॥

—शंकराचार्यः

கேயம் கீதா நாமஸஹஸ்ரம் த்யேயம் ஸ்ரீபதிரூபமஜஸ்ரம் ।
நேயம் ஸஜ்ஜனஸங்கே சித்தம் தேயம் தீனஜனாய ச வித்தம் ॥
பஜகோவிந்தம் ॥

— ஆதிசங்கரர்

இறைவனுக்குரிய ஆயிரம் திருநாமங்களையும் பாடுங்கள். அவனுடைய மகிமையைக் கூறும் கீதை போன்ற நூலை ஓதுங்கள். அவனுடைய வடிவத்தைத் தியானியுங்கள். சத்சங்கத்தில் மனதை ஈடுபடுத்துங்கள். யாருக்கு எது தேவையோ அதைக்கொடுத்து உதவுங்கள். கோவிந்தனை இங்ஙனம் வழிபடுங்கள்.

ஓயாதே உள்குவார் உள்இருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாது இருக்கும் பாதியனை
நாய்ஆன நம்தம்மை ஆள்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகு ஏழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதும்காண் அம்மானாய்.

— மாணிக்கவாசகர்

அருள் விருந்து

கடவுளைச் சார்ந்து இருப்பவனுக்கு அச்சம் ஏதும் இல்லை.

பூலோகத்தில் எதையும் நாடாதவன் முக்தபுருஷன் ஆகிறான்.

உடல் அரியதொரு கருவி என்பதை மனிதன் மறந்து விடலாகாது.

பெரிய பெரிய திட்டங்கள் போடுகின்றவன் வாழ்க்கையில் எதையும் சாதிக்க மாட்டான்.

உன்னைப் புகழ்பவனைப் பற்றி எச்சரிக்கையாயிரு. உன்னை எதிர்ப்பவனோடு அமைதியுற்று இரு.

என் உள்ளம் இயற்கையின் நடைமுறையை ஒத்திருக்குமாகில் நான் மேன்மையுறுவது திண்ணம்.

பற்றுதல்களுள் தெய்வப்பற்றே சாலச்சிறந்தது என்பதை அறிந்து கொள்ளுகிறவன் பாக்கியவான்.

தன்னுடைய பேரியல்பை அறிந்துகொள்ளும்படி குழந்தைக்குப் புகட்டுவது அதற்குச் செய்கின்ற பேருபகாரமாகும்.

தன்னைச் சிறுமைப் படுத்தும் சிற்றியல்புகளை ஒதுக்கித் தள்ளுமளவு மனிதனிடத்து மேன்மைகள் தாமாகவே மிளிர்கின்றன.

உண்மையான தியாகத்தினின்று வடிவெடுக்கும் துன்பம் ஒருவனுக்குத் துன்பமன்று. அது இன்பமாகக் காட்சி கொடுக்கிறது.

தீமையானது ஆண்மையுடன் எதிர்க்கப்படட்டும். அப்படி அல்லாது தன் மீது ஏற்றப்படும் சிறுமைகளை ஏற்றுக் கொள்பவன் கோழை.

புறக்கணிக்கப்பட்ட மாளிகை ஒன்று பாழடைந்தது போன்று காட்சி தருகிறது. ஒழுக்கம் தவறிய மனிதனுடைய பாங்கும் அத்தகையதேயாம்.

தீங்கு இழைக்கும்போது மடையன் அதை அறிகிறதில்லை. தீயிலிட்ட விறகு தன்னைத்தான் அழித்துக்கொள்வது போன்று அம்மடையன் நடந்து கொள்கிறான்.

கஸ்தூரிமான் தன் உடலில் கமழும் நறுமணத்தை நாடிப் புறவுலகில் அலைவது போன்று அறிவிலி தன் சொரூபத்திலுள்ள ஆனந்தத்தை நாடி உலகெங்கும் அலைந்து திரிகிறான்.

மலை உயர்ந்து இருப்பதற்கு ஏற்ப ஆங்கு வேறு ஏதும் வளர்வதில்லை. பள்ளத்தாக்கு தாழ்ந்து இருப்பதற்கு ஏற்ப அது செழிப்படைகிறது. மனிதனுடைய மனதும் அத்தகையதே.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

அஸ்தமன வேளை வந்தது. ஆங்காங்கு அறைகளில் தீபங்கள் ஏற்றி வைக்கப்பட்டன. பரமஹம்சதேவருடைய மனது அவ்வேளையில் தான் பிரபஞ்சத்திற்கு அப்பாலுள்ள பரத்தின் கண் இயல்பாகவே சென்று விடும். அதன் அறிகுறிகள் இப்பொழுது தென்பட்டன. அதீத நிலையிலிருந்துகொண்டு அன்னை பராசக்தியின் திருநாமத்தைப் பக்தி ததும்பும் பாங்கில் அவர் ஓதுவாராயினர். அவருடைய குரலோசையின் இனிமையைக் கேட்கலான பக்தர்கள் ஆனந்தப் பரவசத்தில் மூழ்கியிருந்தனர். அவரைச் சூழ்ந்து அமர்ந்து கொண்டு அவர் ஓதிய அம்பிகையின் திருநாமத்துக்குச் செவிமடுத்த பக்தர்கள் ஆனந்தப் பரவசத்தில் மூழ்கியிருந்தனர். காலமும் அதிவிரைவில் பறந்தோடியது.

பூரியிலே ஆண்டுதோறும் நிகழ்ந்து வந்த ரதோத்ஸவத்தைப் பலராம்வசு ஒரு குறுகிய அளவில் தம் இல்லத்தில் நடத்திவந்தார். இவ்வாண்டில் அந்த நிகழ்ச்சியானது அடுத்த நாள் நடைபெறும் தறுவாயில் இருந்தது. பரமஹம்சதேவரும் அத்திருவிழாவில் கலந்து கொள்ள சங்கல்பம் பண்ணினர். ஆகையினல் அதை முன்னிட்டு அன்று இரவு பலராம் வசுவின் மாளிகையில் தங்கியிருக்கத் திருவுளம் கொண்டார். பொதுவாகக் கல்கத்தாவுக்கு வந்தால் நேரம் எவ்வளவு அதிகம் ஆனலும் அன்று இரவே தக்ஷிணேசுவரத்திற்குத் திரும்பிவிடுவது பரமஹம்சதேவரின் வழக்கமாயிருந்து வந்தது. அந்த வழக்கத்துக்கு விலக்காக அன்றிரவு அவர் பலராம் வசுவின் வீட்டில் சயனித்திருக்கத் தீர்மானித்தார்.

பரமஹம்சர் மாளிகையின் அந்தப்புரத்திற்குச் சென்று சிறிது சிற்றுண்டி அருந்தி வந்தார். படுக்கை ஒன்று அவருக்காக முன் மண்டபத்தையொட்டியிருந்த சிறிய அறையில் ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தது. இரவு சுமார் பத்தரை மணிக்குப் பரமஹம்ச தேவர் நித்திரை சென்றார். அது கோடைக் காலம். ஆகையால் அறையில் புழுக்கம் நிறைந்திருந்தது. மகேந்திரரிடம் சொல்லி விசிறியொன்று கொண்டு வரும்படி ஆக்ஞாபித்தார். அவரும் அங்ஙனமே செய்தார். சிறிது நேரம் தமக்கு விசிறி வீசும்படி மகேந்திரரை வேண்டினர். அவரும் அங்ஙனமே செய்தார். சிறிது நேரத்தில் கண் வளரும் தறுவாயிலிருந்த பரமஹம்சதேவர் மகேந்திரரிடம் அவர் புரிந்து வந்த பணிவிடையை நிறுத்தும்படி ஆணையிட்டார்.

1885ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14ஆம் தேதி செவ்வாய்க்கிழமையன்று பூரி ஜகந்நாதருடைய தேர்த்திருவிழா நாளாக இருந்தது. பலராம் வசுவினுடைய கல்கத்தா மாளிகையிலே அன்று சயனித்திருந்த பரமஹம்ச தேவர் அதிகாலையில் எழுந்திருந்தார். தன்னந்தனியராக இருந்துகொண்டு பக்தி ததும்ப இறைவனுடைய திருநாமத்தை ஓதிக்கொண்டிருந்தார். சிறிது நேரத்திற்குள் மகேந்திரநாத குப்தர் அங்கு வந்து பரமஹம்சதேவரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். அவரைத் தொடர்ந்து ஏனைய பக்தர்களும் ஒருவர்பின் ஒருவராக அங்கு வந்து கூடினர். அப்படிக் கூடியவர்கள் குருதேவருக்கு வந்தனை வழிபாடுகள் செலுத்தியான பிறகு அவரைச் சூழ்ந்து அமர்ந்தனர். பரமஹம்சதேவர் பூர்ணன் என்னும் சிறுவனிடம் பேரன்பு வைத்திருந்தார். அவனுடைய நலனைப்பற்றி மகேந்திரரிடம் விசாரித்துக்கொண்டிருந்தார்.

பரமஹம்சதேவர்: "பூர்ணனிடம் அவன் எத்தகைய வாழ்வு வாழவேண்டும் என்று ஏதாவது நெறிவகுத்துச் சொல்லியுள்ளாயா?"

மகேந்திரர்: "சைதன்யப் பிரபுவினுடைய வாழ்க்கை வரலாறுகளை வாசிக்கும்படி நான் அவனை வேண்டியிருந்தேன். சைதன்யரின் வாழ்க்கை வரலாறுகளின் விவரங்கள் பலவற்றை அவன் ஏற்கனவே நன்கு அறிந்து இருந்தான். அவனிடம் மேலும் தாங்கள் மக்களிடம் சத்தியவிரதத்தை வலியுறுத்திச் சொல்லி வருவதாகத் தெரிவித்தேன்."

பரமஹம்சதேவர்: "நீ அவனிடம் என்னைப் பற்றி அவர் ஒரு தெய்விக அம்சம் வாய்க்கப்

பெற்றவர் என்று சொன்னபோது அவன் அக் கூற்றை எவ்வாறு ஏற்றுக் கொண்டான்?''

மகேந்திரர்: ''கிருஷ்ன சைதன்யருக்கு நிகரான மகா புருஷர் ஒருவரை நீ காண விரும்புவாயாகில் என்னேடு வா என்று பூரனனிடம் நான் சொன்னேன்.''

பரமஹம்சர்: ''வேறு என்ன பகர்ந்தாய்?''

மகேந்திரர்: ''யானை ஒன்று சிறிய தடாகத்தினுள் இறங்கி விளையாடுகின்றபொழுது நீரினுள் அலை கிளம்பி அமளி ஏற்படுகிறது. அதே பாங்கில் சாமான்யமான மனிதன் ஒருவனிடம் தெய்விக உணர்வு வடிவெடுக்குமாகில் அவன் தடுமாற்றம் மிக அடைகிறான். இதே பாங்கில் நீ மீன் அருந்துவதை நிறுத்திவிட்டாய். அப்படிச் செய்திருக்க வேண்டிய அவசியமில்லை. அதை முன்னிட்டு உன் உற்றார் உறவினர் மனக்கிலேசம் மிக அடைவர்'' என்று கூறினேன்.

பரமஹம்சர்: ''அது மிக நன்று. ஒருவனது உள்ளத்தில் எழும் உணர்ச்சிகள் அனைத்தையும் வெளியே யாருக்கும் காட்டாது தன் உள்ளத்தின் உள்ளேயே அவை யாவையும் மறைத்து வைப்பது மிக நன்று.''

காலை மணி சுமார் ஆறரை இருக்கும். மகேந்திரர் கங்காஸ்நானம் செய்யப் புறப்பட்டார். அப்பொழுது பூகம்பம் ஒன்று நேரிட்டது. அதைக் கேட்டதும் மகேந்திரர் பரமஹம்சதேவர் அமர்ந்திருந்த அறைக்குள் விரைந்து ஓடினர். பரமஹம்சதேவர் அம்மாளிகையின் முன் மண்டபத்தில் நின்றுகொண்டு இருந்தார். பக்தர்கள் அனைவரும் அவரைச் சுற்றிலும் கூடினார்கள். பிறகு அப்பொழுது நிகழ்ந்த பூகம்பத்தைப்பற்றிய பேச்சு அவர்களுக்கிடையில் நிகழ்ந்தது. அது ஒருவாறு வலுத்திருந்தது. ஆதலால் பக்தர்கள் பலர் அதை முன்னிட்டு ஒருவாறு அச்சம் கொண்டு இருந்தனர்.

மகேந்திரர்: ''நீங்கள் எல்லாரும் அந்தப் பூகம்பம் நிகழ்ந்த வேளையில் கீழே தரை மட்டத்தில் சென்று இருந்திருக்கவேண்டும். மேலே ஓடி வந்தது பிசகு.''

பரமஹம்சர்: ''பூகம்பம் நிகழ்கிறபொழுது கூரை வீட்டினுள் யாரும் இருக்கலாகாது. அப்படியிருப்பது ஆபத்துக்கு ஏதுவாகும். அப்படியிருந்தும் மக்கள் தாங்கள் கொண்டுள்ள அச்சத்தால் செய்த தவறுதல் ஒன்றையே மீண்டும் மீண்டும் செய்து வருகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த பெரியபுயல் உன் ஞாபகத்தில் இருக்கிறதா?''

மகேந்திரர்: ''ஆம். ஐயனே! நான் அப்பொழுது சுமார் ஒன்பது வயதுடைய சிறுவனாக இருந்தேன். புயல்காற்றினின்று காப்பாற்றப்படவேண்டும் என்று இறைவனிடம் நான் பிரார்த்தனை பண்ணிக்கொண்டு இருந்தேன்.'' (தமக்குள்) நெடுநாளைக்கு முன்பு நிகழ்ந்த புயல் காற்றைப் பற்றிப் பரமஹம்சதேவர் இப்பொழுது ஏன் ஞாபகத்துக்குக் கொண்டு வந்தார்? கண்ணீரும் கம்பலையுமாக தனியனாய் இருந்துகொண்டு என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று தெய்வத்திடம் நான் பிரார்த்தனை பண்ணியதை அவர் அறிந்துள்ளாரா? நான் பிறந்தது முதற்கொண்டு என் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை இவர் அறிந்துள்ளாரா?

பரமஹம்சதேவர்: ''தக்ஷிணேசுவரத்தில் நிகழ்ந்த இந்த நிகழ்ச்சியானது பிற்பகலில் நெடுநேரத்திற்குப் பிந்தியாம். ஆயினும் ஏதோ ஒரு போக்கில் எங்களுக்குத் தேவையாயிருந்த உணவை நாங்கள் சமைத்துக் கொண்டோம். மரங்கள் பெரும் புயல் காற்றால் கீழே தள்ளப்பட்டன. மரங்களுக்குப் பக்கத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகளின் கதியும் இதுவாம்.

''ஆனல் நிறை ஞானம் அடைந்துள்ள ஞானி ஒருவன் சாவதும், பிறரால் கொல்லப்படுவதும் ஒன்றே என்பதை அறிய வருகிறான். இரண்டு செயல்களும் அநித்தியமானவைகளாம். அப்படியிருக்கையில் ஒருவன் மரணமடைகின்ற பொழுது உண்மையில் அவன் செத்தவன் அல்லன். அதே விதத்தில் ஒருவன் மற்றொருவனால் கொல்லப்படுகின்றபொழுது அவன் கொல்லப்பட்டவன் அல்லன்.

''லீலை என்னும் நிகழ்ச்சிகளும் நித்தியம் என்னும் கர்மத்துக்கு அப்பால் உள்ள நிலையும் உண்மையில் ஒன்றேயாம். ஒரு நிகழ்ச்சியை ஒரு பாங்கில் வியாக்கியானம் பண்ணுகின்ற பொழுது அது லீலை அல்லது ஈசனுடைய விளையாட்டு எனக் கருதப்படுகிறது. மற்றொரு பாங்கில் பொருள்படுத்தப்படுகின்ற பொழுது

அது பரம் அல்லது அதீதம் எனக் கருதப்படு கிறது. லீலை என்னும் கூற்றுக்கு அழிவு வரு கிறது. ஆனால் நித்தியம் என்னும் கூற்று யாண் டும் இருந்தபடி இருக்கிறது. நீரானது அலை வீசிக் கொண்டு இருக்கிறபொழுதும் அமைதி யுற்று இருக்கின்ற போதும் அதன் சொரூபம் ஒன்றேயாம்.''

பக்தர்களோடு பரமஹம்சதேவர் அம்மாளி கையின் முன் பகுதியில் அமர்ந்து கொண்டு இருந்தார். மகேந்திரர், முகர்ஜி, ஹரி, இளைய நரேந்திரன் ஆகியவர்களும் மற்றவர்களும் அங்கு அமர்ந்து இருந்தனர். ஹரி என்பவர் வயதில் சிறியவர். அவருக்குச் சுமார் இருபத்து மூன்று வயது இருக்கும். அவர் வேதாந்தம் கற்பதி லும், ஏகாந்த வாசம் பண்ணுவதிலும் விருப்பம் மிக உடைத்திருந்தார். அவர் பிரம்மச்சரிய ஆச்ரமத்தைக் கடைப்பிடித்து வந்தார். பரம ஹம்சதேவர் அவரிடத்து அன்பு மிகப் பூண்டு இருந்தார். ஹரி தம்மைக் காண அடிக்கடி வர வேண்டும் என்பது பரமஹம்சரின் விருப்பம். ஆயினும் ஹரிக்கு ஏகாந்த வாசமே மிகப் பிடித்து இருந்தது. ஆதலால் பரமஹம்சதேவர் விருப்பப்படி அடிக்கடி அவரைத் தரிசித்து வர ஹரிக்கு இயலாது போயிற்று.

பரமஹம்சதேவர்: (ஹரியைப் பார்த்து) ''நெடு நாளாக உன்னைக் காணவில்லை. அதற்குக் கார ணம் யாதோ? ஒரு விஷயத்தை நன்கு ஞாபகத் தில் வைத்துக்கொள்வாயாக. பரம்பொருள் நிர் குணப் பிரம்மமாகவும், சகுண வஸ்துவாகவும் இலங்குகின்றார். வேதாந்தம் புகட்டுவது யாது? பிரம்மம் சத்தியம், ஜகத்மித்தை அல்லவா? ஆயி னும் பரம்பொருளானவர் பக்தன் ஒருவனுடைய அகங்காரம் அழிந்துபட்டுப்போகாது காப் பாற்றி வைத்திருக்கும் பரியந்தம் மாயப்பிரபஞ் சமும் மெய்ப்பொருளேயாம் அல்லவா? ஆயி னும் பரமன் பக்தனுடைய அகங்காரத்தை அறவே அகற்றுங்கால் எஞ்சியிருப்பது யாது? வாக்கைக் கொண்டு அதை விளக்க முடியாது. ஆயினும் பரமன் பக்தனுடைய அகங்காரம் அழிந்துபட்டுப் போகாது காத்து வைத்திருக் கும் காலமெல்லாம் இகம் பரம் ஆகிய இரண் டும் உண்மையே என அங்கீகரித்தாக வேண் டும். வாழை மரத்தின் பட்டைகளை அகற்று மிடத்து உள்ளேயிருக்கின்ற தண்டு வெளியா கிறது. மரம் ஒன்றுக்குப் பட்டைகள் அமைந் திருக்கும் காலமெல்லாம் அதற்கு உட்பொரு ளும் அமைந்திருப்பது உண்மையே. அதே விதத்தில் அம்மரத்துக்கு உட்பொருள் மறை யுங்கால் பட்டையும் மறைந்துபட்டுப் போகி றது. பட்டை மறையுங்கால் உட்பொருளும் இல்லாது போகிறது. நீ நித்திய வஸ்துவைப் பற்றிப் பகருமிடத்து அதன் லீலையும் நிலைத் திருக்கிறது. பிறகு நீ லீலையைப் பற்றிப் பகரு மிடத்து நித்தியமும் ஆங்கு நிலைத்திருக்கிறது.

''பரவஸ்து தாமே பிரபஞ்சமாகவும், உயிர்த் தத்துவங்களாகவும், இருபத்துநான்கு தத்து வங்களாகவும் இலங்குகின்றார். அப்பொருள் கர்ம அதீதத்தில் இருக்கின்றபொழுது அதைப் பரப்பிரம்மம் எனப்பகர்கிறோம். அதே பொருள் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் ஆகிய மூன்று விதச் செயல்கள் மயமாகக் காட்சி தருகின்ற பொழுது அப்பொருளைப் பராசக்தி என்கின் றோம். பிரம்மமும் சக்தியும் ஒன்றினின்று ஒன்று வேறுபட்டதாகாது. நீரானது பெருகி ஓடும் பொழுதும் அது நீர்தானே?

''ஜீவன் ஒருவனுக்குத் தான் படைத்துள்ள ஜீவபோதத்தினின்று அப்பால் செல்ல இய லாது. ஜீவபோதம் இருக்கும் பரியந்தம் தன் காட்சிக்கு எட்டுகிற இப்பிரபஞ்சத்தை வெறும் வேதாந்தம் என்று அவன் பகரலாகாது. வில் வப் பழத்தின் மேல் ஓட்டையும் சதையையும் நீ புறக்கணிப்பாயாகில் அப்பழத்தின் உண்மை யான எடை உனக்குத் தெரியாதுபோம். வீடு ஒன்றின் மேல் கூரையானது எந்தச் செங் கல், சுண்ணும்பு முதலியவைகளைக்கொண்டு அமைக்கப் பெற்று இருக்கிறதோ அதே வஸ்துக்களைக் கொண்டு அதனுடைய படிக் கட்டும் கைப்பிடிச் சுவரும் அமைந்திருக்கின் றன. அங்ஙனமே ஜகத்தும் அதில் வாழ்ந்து வரும் உயிர் வகைகளும் மெய்ப்பொருளாகின் றன. ஜகத்தும், ஜீவர்களும் இறைவனுடைய சகுணத் தோற்றங்களாகின்றன. சகுண உபா சனையில் நம் சாதனை துவங்கவேண்டும.

''ஞானியர்கள் கடவுளுக்கு வடிவம் உண்டு என்றும் அவ்வடிவங்களைக் கடந்து அவர் இருப் பவர் என்றும் அங்கீகரிக்கின்றனர். இகம் பரம் ஆகிய இரண்டுமாக இலங்கும் பொருள் ஒன்றேயாம்.''

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

14-16 பாசம் அகலாமல் பதியில் கலவாமல்
மாசுஇல் சமத்துமுக்தி வாய்க்குநாள்
எந்நாளோ.

ஜீவனைப் பதியுடன் சேராமல் உலகத்தில் கட்டிப் பிணைத்து வைத்திருப்பது பாசம் எனப்படும். ஜீவன் இதுவரையில் பாசத்தால் கட்டுண்டிருந்து வளர்ச்சி அடைந்து வந்தான். ஜீவன் தன்னைச் சிறியதில் கட்டுண்டிருக்கின்ற நிலையைச் சற்றுப் பெரியதாக்கிக் கொண்டே வருகிறபொழுது அவன் வளர்ச்சி அடைகின்றான். ஜட சொருபத்தில் கட்டுண்டிருந்த ஜீவன் சித்சொருபத்தைப்பற்றி நினைத்துத் தன்னைச் சேதன நிலைக்கு உயர்த்திக் கொண்டு வந்துள்ளான். முற்றும் சித்சொருபமாக இருப்பவர் கடவுள் ஆகின்றார். ஜீவன் தன்னை முற்றும் சின்மயமாக்கிச் சித்சொருபத்தில் தன்னைக் கரைத்து விடுவதே பரம்பொருளோடு ஒன்றுபட்ட நிலையாகும். அப்பொழுது ஜீவன் வேறு, பரம் வேறு என்ற நிலை அகன்று போய்விடுகிறது.

தாயுமானவர் பரத்தோடு லயமாகாது பரத்தை அனுபவிக்க வேண்டுமென்று விரும்புகின்றார். "நான் கற்கண்டு ஆக விரும்பவில்லை. கற்கண்டைச் சுவைக்க விரும்புகின்றேன்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளார். தாயுமானவர் இந்நிலையைத்தான் விரும்புகின்றார்.

பாசம் முற்றும் அறுந்து போனல் ஜீவன் பதியுடன் கலந்துவிடுவான். மனதைத் தூய நிலையில் வைத்துக்கொண்டு பரம்பொருளை அனுபவிக்கவேண்டும் என்பதைத் தாயுமானவர் விரும்புகிறார். உலகத்தோடு பந்தப்படுத்தும் பாசத்தில் அகங்கார உணர்ச்சி வளர்கிறது. அகங்காரம் மனிதனைச் சிறுமைப் படுத்துகிறது. காமம், வெகுளி, லோபம் முதலிய சிற்றியல்புகளுக்கு அகங்காரம் ஆதரவு தருகின்றது. அவ் அகங்காரத்தை ஒழிப்பதற்கு நான் ஈசுவரத் தொண்டன் என்று எண்ணிக்கொள்வது நல்லது. அந்த அகங்காரம் நம்மை ஈசனேடு பிணைத்து வைக்கிறது. "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்று கூறும் நாவுக்கரசர் 'கோமார்க்கே நாம் என்றும் மீளா ஆள்' என்று கூறுகிறார். தாம் உலகுக்கு அடிமையல்லர். உலக நாயகனுகிய இறைவனுக்கே அடிமை என்று தம்மை இறைவனின் தொண்டனுகக் கருதித் தம் அகங்காரத்தைக் குற்றமற்றதாக்குகின்றார். சரீரத்தையும், சிற்றியல்புகளையும் தன்மயமாக அகங்கரிக்கின்ற உணர்வை நீக்கிவிட்டுத் தெய்வத் தொண்டன் என்று ஒருவன் தன்னை அகங்கரிப்பதில் அவனிடம் தெய்வப்பற்று வளர்கிறது. உலக பாசத்தை உண்டு பண்ணும் அகங்காரம் தெய்வப்பற்றை உண்டுபண்ணும் அகங்காரமாக மாறி அமையவேண்டும். அப்பொழுது நம் உள்ளத்தில் உள்ள உலக பாசம் தெய்வப் பற்ருக மாறுகிறது. தெய்வப் பற்று தெய்வப் பித்தாக வடிவெடுக்கவேண்டும். அப்பொழுதுதான் ஈசனுடைய மகிமையை நன்கு உணர முடியும். என் உள்ளத்தில் உள்ள உலகபாசம் தெய்வ பாசமாக மாறி இறைவா, உன்னை நான் அனுபவிக்கவேண்டும் என்பதைத் தாயுமானவர் பாசம் அகலாமல் உன்னை அனுபவிக்கவேண்டும் என்கின்றார்.

ஞானி தம்மை இறை சொருபமாக்க முயல்கின்றான். பக்தன் இறைவனுக்குப் புறம்பாக இருந்து இறைவனை அனுபவிக்க விரும்புகின்றான். தெய்வத்தோடு கலந்துவிடும்பொழுது மனம் முற்றும் மாய்ந்து போகிறது. இறை இன்பத்தை அனுபவிக்கின்றபொழுது மனது முற்றும் தூயதாய் விடுகிறது. மாசுடைய மனது பந்தத்தை உண்டுபண்ணுகிறது. மாசுடைய மனது வேற்றுமையை வளர்க்கின்றது. மாசுடைய மனதே இன்ப துன்பத்துக்குக் காரணமாகிறது. மாசற்ற மனம் படைத்தவர்கள் 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்று பகர்கின்றார்கள். துன்பத்திலிருந்து விடுபடுவதைத்தான் இங்குத் தாயுமானவர் முக்தி என்று கூறுகின்றார்.

மனம் உலக விஷயங்களில் ஈடுபடுகிறபொழுது நடுநிலையிலிருந்து பிறழ்ந்துபோய் விடுகிறது. மனதுக்குத் தெய்வத்திடத்துப் பிடிப்பு ஏற்படும்பொழுது நடுநிலை பிறழாமல்

இருக்கின்றது. நடுநிலை பிறழ்ந்த மனது உலக பாசத்தை வளர்த்து, உலகத்தில் உழலும்படி செய்கிறது. நடுநிலை பிறழாத மனது உலகக் காரியங்களைச் செய்வதற்கிடையில் சாந்தத்துடன் இருந்து இறை இன்பத்தை நுகரச் செய்கிறது. நடுநிலை பிறழாத மனம் படைத்தவன் தனக்கு அமைந்த கடமைகளைத் தெய்வீக உணர்வோடு கடவுள் வழிபாடாகச் செய்கின்றான்.

ஈசனோடு ஒன்று பட்ட நிலையை அடையாமல் ஈசுவர இன்பத்தை அனுபவிக்கவேண்டும் என்பதைப் பதியில் கலவாமல் என்று தாயுமானவர் பகர்கின்றார். ஈசுவர இன்பத்தை அனுவிப்பதற்குரிய மாசற்ற மனதும் நடுநிலையோடு கூடிய மனதும் சாதனையின் மூலம் தமக்கு அமைய வேண்டும் என்பதைத் தாயுமானவர் மாசில் சமத்துவ முக்தி வாய்க்கும் நாள் எந்நாளோ என்று பகர்கின்றார்.

14-17. சிற்றறிவு மெள்ளச் சிதைந்து எம்மான் [பேரறிவை
உற்று அறியா வண்ணம் அறிந்து ஓங்குநாள் [எந்நாளோ.

பிரக்ஞானம் பிரம்மம் என்பது மகாவாக்கியம். பேரறிவே மெய்ப்பொருள் என்பது அதன் பொருள். இயற்கையும் இயற்கையில் உள்ள உயிர்களும் இறைவனுடைய சொருபங்களாகும். எனவே அவைகளினூடு அறிவு இருப்பதை நாம் காண்கின்றோம். செடி ஒன்று சூரிய வெளிச்சம் உள்ள இடத்துக்குத் தன் கொழுந்தைத் திருப்புகிறது. பூமியில் சத்துள்ள இடத்துக்குத் தன் வேரை அனுப்புகிறது. இது அதனுடைய அறிவின் செயலாகும். மற்ற உயிர்களிடத்துத் தென்படும் அறிவும் அவ் உயிர்களின் செயல்களின் மூலம் விளங்குகிறது. நீருள்ள இடத்தைக் கண்டு பிடித்துப் பறவைகள் ஒரு நாட்டைவிட்டு மற்றொரு நாட்டுக்குச் செல்கின்றன. நாய் ஒன்று மோப்ப சக்தியைப் பயன்படுத்தி யஜமானனை அடையாளம் தெரிந்துகொள்கிறது. இந்த அறிவுக்குச் சிற்றறிவு என்று பெயர்.

"சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு" என்ற கோட்பாட்டின் படி ஐம்புலன்களும் உலகை அறிவதற்குப் பயன்படுகின்றன. மனது ஐம்புலன்களின் மூலம் புறவுலகுக்குச் சென்று புறப்பொருள்களை அறிகின்றது. இந்த அறிவின் மூலம் மனிதன் சிற்றின்பத்தைத்தான் பெறமுடியும். சிற்றின்பத்தைப் பெற உதவும் அறிவைச் சிற்றறிவு என்கின்றோம்.

இன்பத்தைப் பெறுவது உயிர்களின் குறிக்கோள். புலன் இன்பத்தில் விருப்பம் கொண்டுள்ள உயிர்கள் புலன் அறிவை வளர்த்து வருகின்றன. புலன் மூலம் பெறும் இன்பம் நிலையற்றது என்பதை உணர்கிறபொழுது புலனறிவை வளர்ப்பதில் நாட்டம் குறைகின்றது. புலன் இன்பத்தை வெல்லுகின்றவளவு மனித அறிவு பேரறிவாக மாறி அமைகிறது. புலன் இன்பத்துக்குக் கட்டுப்பட்டுக் கிடக்கின்ற மனிதன் சிற்றறிவு படைத்தவனாக இருக்கின்றான். புலன் இன்பத்தை வெல்லுகின்றவன் சிற்றறிவைப் பேரறிவாக மாற்றமுடியும்.

சிற்றின்பத்தை வெல்லுகின்றவளவு சிற்றறிவை அழிக்கின்றான். பேரறிவாகிய மெய்ப்பொருளினிடத்து மனதைப் பொருத்துகின்ற அளவு பேரறிவை வளர்க்கின்றான். இதனைத் தாயுமானவர் 'சிற்றறிவு மெள்ளச் சிதைந்து எம்மான் பேரறிவை உற்று' என்று பகர்கிறார்.

உலக இன்பத்தைப் பெற நம் அறிவு வேலை செய்யுமானால் அது போகத்தை வளர்க்கிறது. புறப்பொருள்கள் நமக்கு இன்பம் தருபவைகள் என்று கருதி உலகத்தின்கண் அறிவைச் செலுத்துபவன் ஜீவபோதத்தை வளர்க்கின்றான். ஜீவபோதத்தைத் துடைத்துத் தள்ளுவதுதான் நம் குறிக்கோளாகும்.

உயிர்க்கு உயிராகி உயிர்களை எல்லாம் இயக்குகின்ற இறைவனை அறியும் அறிவே பேரறிவாகும். இறைவன் நம் அறிவைப் பேரறிவாக மாற்றுவதற்குத்தான் இவ்வுலகைப் படைத்துத் தந்து இருக்கிறார். போக நாட்டம் உடையவர்களுக்கு இவ்வுலகம் காம விகாரத்தை உண்டுபண்ணும் கவர்ச்சி உடையதாகத் தெரிகிறது. அருள்நாட்டம் உடையவர்களுக்கு இவ்வுலகம் ஞானத்தைப் புகட்டுகின்றது. இறைவனைப் போகவாழ்வின் மூலம் அறிய முடியாது; யோகத்தின் மூலமே அவனை அறிய முடியும் என்பதை 'அறியா வண்ணம் அறிந்து ஓங்கு நாள் எந்நாளோ' என்று தாயுமானவர் கூறுகிறார்.

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-20

திரு. அளசிங்கப்பெருமாளுக்குச் சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவிலிருந்து எழுதிய கடிதத்தின் கருத்துக்களாவன: உங்களுக்கு நான் பலமுறை கூறியும் துண்டுப் பிரசுரங்களை எனக்கு அனுப்பிக்கொண்டே இருக்கிறீர்கள். உடனே அவற்றை அனுப்புவதை நிறுத்துங்கள். அவைகளை எல்லாம் பார்ப்பதற்கு எனக்கு அவகாசம் இல்லை. நான் அவைகளைச் சிறிதும் பொருள்படுத்தவில்லை.

இந்துக்கள் வெறும் பேச்சளவில்தான் இருப்பார்கள். காரியாம்சத்தில் ஈடுபடமாட்டார்கள். காரியத்தின் பயனை அனுபவிக்கத் தயாராக இருப்பார்கள். ஆனால் காரியம் செய்ய முன்வரமாட்டார்கள். ஒரு கூட்டத்துக்கு ஆயிரக்கணக்கான மக்கள் வருவார்கள் என்றாலும் பொதுக் காரியம் ஒன்றில் ஈடுபடுவதற்குத் தாங்களும் முன்வரமாட்டார்கள்; பொதுக் காரியத்துக்குப் பொருளுதவியும் செய்யமாட்டார்கள். நாம் யாரையும் சார்ந்திருக்கக் கூடாது. நமக்கு நாமே உதவிசெய்துகொள்ளாவிட்டால் நாம் வாழத் தகுதியற்றவர்களாகி விடுவோம்.

இன்றைக்கு நம் நாட்டுக்கு எது தேவை என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். பாமர மக்களுக்குக் கல்விதரும் திட்டத்தை நான் சிறிதுகாலத்துக்கு ஒதுக்கி வைத்திருக்கிறேன். அத்திட்டம் படிப்படியாகச் செயல்பட்டு வரும். இப்பொழுது ஊக்கமும் உற்சாகமும் ததும்பிய ஊழியர்களைக் கொண்ட சமயக் குழுக்கள் தேவை. சென்னையில் ஒரு கல்லூரி அமைய வேண்டும். அக்கல்லூரியில் சமய ஆராய்ச்சியும், சம்ஸ்கிருதப் போதனையும் வேதாந்தக் கோட்பாடுகளைப் பற்றிய போதனையும் ஐரோப்பிய மொழிகள் சிலவற்றைப் புகட்டுவதும் நிகழவேண்டும். ஓர் அச்சகம் இருக்க வேண்டும். அதில் ஆங்கிலத்திலும், இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிகளிலும் பத்திரிகைகளை அச்சாக்க வேண்டும். அவற்றின் மூலம் நம்முடைய சனாதன தர்மம் நம் மக்களிடையே நன்கு பரப்பப்படவேண்டும். இதைச் செய்தால் தான் ஏதாவது ஒன்றை நீங்கள் சாதிக்க முடியும். இத்தகைய செயல்கள் இந்தியாவில் நீங்கள் எதுவும் செய்யாவிட்டால் நான் ஏதாவது செய்தாக வேண்டும்.

நான் உலகுக்குத் தரும் செய்தி இருக்கிறது. அதை யார் புரிந்து கொண்டு செயல்படுத்துவார்களோ அவர்களுக்கு நான் சொல்லியாக வேண்டும். நான் எதைப் பற்றியும் கவலைப் படப்போவதில்லை. எது இறைவனுடைய இச்சையோ அது என்னுடைய இச்சையாகும். எனக்கு என்று இச்சை எதுவும் இல்லை. இறைவன் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நான் கருவியாக இருக்க விரும்புகின்றேன்.

நாம் தத்துவத்துக்குத்தான் முக்கியத்துவம் தருவோம். மற்ற மதத்தினரைப் போன்று நபருக்கு முக்கியத்துவம் தருவதில்லை. தீர்க்கதரிசிகளுக்குப் பின்னால் வந்த அவர்களுடைய சிஷ்யர்கள் தத்துவங்களைத் தங்களுடைய தலைவர்களுடைய கருத்துக்கள் என்று கூறி நபருக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். அதன் விளைவாகத் தத்துவங்கள் மறைந்து தனி நபர் முக்கியத்துவம் பெற்று விட்டார். தனி நபருக்கு முக்கியத்துவம் கொடுப்பது நம்மிடத்திலும் நிகழ்ந்து விடக் கூடாது. ராமகிருஷ்ணருடைய சீடர்கள் இதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தத்துவத்தைப் புரிந்து கொண்டு அதை நிறைவேற்றுவதற்குப் பாடு படுங்கள். தத்துவத்தை மக்களிடையே பரப்புங்கள். புத்தமதம், கிறிஸ்துவமதம், முகம்மதிய மதம் தோன்றியன போன்று இராமகிருஷ்ண மதத்தைத் தோற்றுவிக்க இராமகிருஷ்ணர் விரும்பவில்லை. இராமகிருஷ்ணருடைய சீடர்கள் இதை அறிந்து செயல்பட வேண்டும். தனி நபர் மறைந்து போவார். தத்துவம் என்றைக்கும் மறையாது. தத்துவத்தை அடிப்படையாகக்கொண்ட மதத்தை யாரும் அழித்துவிட முடியாது. இந்துமதம் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருப்பதால் அதற்குச் சனாதனதர்மம் என்று பெயர் வந்தது. தத்துவத்துக்கு ஒத்திருப்பதை ஏற்றுக்கொண்டு தத்துவத்துக்கு ஒத்து வராததை ஒதுக்கித் தள்ளவேண்டும். இந்த முறையில் செயல்பட்டு நாம் முன்னேறி வருவதற்கு இறைவன் நம்மை ஆசீர்வதிப்பாராக.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (474) **குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சி ஒரு சமயம் நடக்கும்போது அந்த நிகழ்ச்சியை முன்னரே கண்டது போன்ற ஞாபகம்வரக் காரணம் என்ன?**

மனிதனுடைய ஜீவிதம் இப்பொழுது எடுத்துள்ள பிறவியிலே முதல் முதலாகத் துவங்கியது அன்று. கணக்கற்ற பிறவிகளை மனிதன் சதா எடுத்துக்கொண்டே வருகிறான். அப்பிறவிகளில் அவனுக்குண்டான அனுபவங்களில் சில மனதிலே ஆழ்ந்து இடம்பெறுகின்றன. அங்ஙனம் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் போன்றவைகள் அடுத்த பிறவியிலும் நிகழ்வது இயல்பு. அப்படி நிகழுங்கால், இதுபோன்ற நிகழ்ச்சி ஒன்றை நான் முன்பு எங்கேயோ பார்த்திருக்கின்றேனே என்னும் எண்ணம் மனதில் உதயமாகிறது. மனிதனுக்கு மறுபிறப்பு உண்டு என்பதற்கான அத்தாட்சிகளுள் இத்தகைய அனுபவமும் ஒன்றேயாம்.

இனி இவ்வுலக வாழ்க்கையில் மனிதன் பெறுகிற அனுபவங்களுள் மனிதனோடு மனிதன் வைக்கும் இணக்கமும் நன்றேயாம். சிலரோடு ஒட்டி உறவாடுதலில் எடுத்த எடுப்பிலிருந்து இடைஞ்சல் ஏதுமில்லை. பழைய நண்பனோடு உறவாடுவதுபோன்று அந்த இணக்கம் தானாக வந்து அமைகிறது. இனி வேறு சிலரோடு இணங்கி நடந்துகொள்ள மனது மறுதலிக்கிறது. இத்தகைய செயலும் பூர்வ ஜன்மாந்திர வாசனைகளோடு இணைக்கப்படுகிறது.

மனிதன் உலக வாழ்வு எதிலும் பற்றற்றவனாக இருப்பானாகில் இங்ஙனம் வாழ்க்கை சம்பந்தமான பல உண்மைகள் தாமாகவே அவன் மனதில் உதயமாகின்றன. அதற்கு மேல் பரஞானத்தைப் பெறுதற்கும் படிப்படியாக அன்னவன் பக்குவமடைந்து வருகின்றான்.

கேள்வி: (475) **ஆத்ம ஞானம் என்றால் என்ன? மெய்யறிவு என்பது என்ன?**

ஆத்மஞானம், பிரக்ஞானம், பிரம்மஞானம், மெய்ஞ்ஞானம்,மெய்யறிவு, வாலறிவு, பேரறிவு என்ற சொற்கள் பரம்பொருளைக் குறிக்கும் சொற்களாகும்.

பரஞானம், அபரஞானம் என்ற இரண்டில் பரஞானம் என்பது இந்திரியாதீதத்திலுள்ள ஞானத்தையும் அபரஞானம் என்பது இந்திரியங்களுக்கு உட்பட்ட அறிவையும் குறிக்கும். இந்திரியங்களைக் கொண்டும் மனதைக்கொண்டும் பெறுகின்ற அறிவுக்குப் பிரபஞ்ச அறிவு அல்லது உலக அறிவு என்று பெயர். உலகம் பஞ்சேந்திரியங்கள் மூலமாக உணரப்படுகின்றது. மனம் பஞ்சேந்திரியங்கள் மூலமாகப் புறவுலகைப்பற்றிய அறிவை நமக்குத் தருகின்றது. பஞ்சேந்திரியங்கள் செயலற்றுப் போய்விட்டால் உலக அறிவு தடைப்படுகிறது.

பஞ்சேந்திரியங்களுக்கு அப்பால் மனம் சென்று ஆங்கு உண்டாகும் உணர்வைப்பெறுமானால் அவ்வுணர்வு ஆத்ம ஞானத்தைத் தரும். மனது சரீர உணர்வைக் கடந்து அப்பால் செல்லும்பொழுதுதான் ஆத்மஞானத்தைத் தெளிவாகப் பெற முடியும். ஐந்து இந்திரியங்கள் மூலமாக அது சிற்றுணர்வு வசப்பட்டிருக்கும் பொழுது மாசடைந்து விடுகிறது. மாசுடைய மனதைக் கொண்டு ஆத்மஞானம் பெறமுடியாது. மனதை மாசற்றதாக்கும் பொழுதுதான் ஆத்மஞானத்துக்குத் தகுதியுடையவர்களாகிறோம்.

மனதில் உலக சம்பந்தமான விருத்திகளும், காமசம்பந்தமான விருத்திகளும் நிறைந்திருக்கின்றன. அவ்விருத்திகள் மனதை உலக சம்பந்தமான எண்ணங்களிலும், காம சம்பந்தமான எண்ணங்களிலும் இழுத்துச் செல்லுகின்றன. அவ்விருத்திகள் சக்தி வாய்ந்தவைகளாக இருக்கும்பொழுது நாம் அவற்றின் மயக்கத்துக்கு ஆட்பட்டிருக்கின்றோம். அவற்றின் வேகம் ஓயும் பொழுதுதான் மனம் நித்தியத்துவத்தைப் பற்றியும், அறிவைப்பற்றியும், ஆனந்தத்தைப் பற்றியும் நினைக்கின்றது. அப்பொழுது நாம் சச்சிதானந்த சொரூபம் என்ற விருத்தியை உண்டுபண்ணுகின்றோம். அவ்விருத்தி நாம் ஆத்ம சொரூபம் என்ற உணர்வை உண்டுபண்ணுகிறது. இறுதியில் அவ்விருத்தியும் நசித்தால் நாம் வேறு, ஆத்ம சொரூபம் வேறு என்ற பேதம் ஒழிகிறது. நாம் ஆத்ம சொரூபமே ஆய்விடுகிறோம். அந்நிலை தான் ஆத்ம ஞானம் பெற்றநிலையாகும். மனதில் தெளிந்த நிலையை உண்டுபண்ணி நிஜ

சொருபத்தை விளக்கிக்காட்டுவது ஆத்ம ஞான மாகும்.

கேள்வி: (476) அவதார புருஷர்கள் அதர் மத்தை ஒழித்துத் தர்மத்தை நிலைநாட்ட வருகின் றார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒழித்த அதர்மம் எது? வளர்த்த தர்மம் எது?

மனிதனை மனிதன் தீண்டுவது பாபம் என்ற கொடிய எண்ணம் மனிதனுடைய உள்ளத் தில் புகுந்து சில மக்கள் கீழ்ஜாதி என்று ஒதுக்கப்பட்டு வந்தார்கள். தீண்டாமை என்ற அதர்மம் சமுதாயத்தில் புகுந்து கிடந்தது. இந்தத் தீண்டாமையை ஒழிப்பதற்கு அன்றே இராமகிருஷ்ணர் தம் போக்கில் சீர்திருத்தச் செயலை ஆரம்பித்துவிட்டார். அவர் பிராமண குலத்தில் பிறந்தவர். குலப்பெருமை தமக்கு இருக்கக்கூடாது என்று நள்ளிரவில் சேரிக்குச் சென்று தம் நீண்ட முடியைக் கொண்டு "இறைவா, இப்பகுதியில் வாழும் மக்கள் உம் குழந்தைகளாவார்கள். அவர்கள் அறியாமை யால் செய்துள்ள அசுத்தத்தை எல்லாம் துப் புரவு செய்யும் பாக்கியத்தை எனக்கு அளித் துள்ளாய்" என்று சேரி முழுவதையும் யாருக் கும் தெரியாமல் துப்புரவு செய்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வீட்டில் தனம் என்னும் கீழ்க்குலப் பெண் வேலைசெய்து வந் தாள். அவள் நற்குணம் படைத்தவள். பேச் சுக்கு இடையில் ஒருமுறை ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவளிடம் "உபநயன காலத்தில் உன்னிடம் தான் முதல் பிக்ஷை ஏற்பேன்" என்று கூறி இருந்தார். அவருக்குத் தக்க வயது வந்ததும் உபநயனம் செய்து முடித்தார்கள். அச்சடங் கில் கிராமத்திலுள்ள பிராமணர்கள் எல்லாரும் கலந்துகொண்டார்கள். உபநயனச் சடங்கு முடிந்ததும் "எங்களுக்குள் யார் வீட்டுக்கு நீ முதல் பிக்ஷைக்கு வரப் போகிறாய்" என்று அங்குக் கூடியிருந்த பிராமணர்கள் கேட்டார் கள். "நான் உங்கள் யாருடைய வீட்டுக்கும் பிக்ஷைக்கு வரப்போவதில்லை. தனம் என்ப வளிடம்தான் நான் முதல் பிக்ஷை எடுக்கப் போகிறேன்" என்று அவர்களிடம் கூறினார். எல்லாரும் ஆக்ஷேபனை தெரிவித்தார்கள். குல நாசத்தை உண்டுபண்ணத் தீர்மானித்து விட்டார் என்று கூறினார்கள். தனத்திடம் பிக்ஷை எடுக்கக்கூடாது என்று தடைபோட் டார்கள். "தனம் நல்லவள். நான் முதல் பிக்ஷை அவளிடம் வாங்குவதாக வாக்குக் கொடுத்திருக்கிறேன். எனவே நான் "அவ ளிடம்தான் பிக்ஷை வாங்குவேன்" என்று கூறி அச்செயலையும் செய்து முடித்தார். நல்லவர் கள், சத்தியத்தைக்காப்பவர்கள் அந்தணர்கள் என்பதைச் செயலில் செய்து காட்டினார்.

பெண்கள் அடிமைகளாக நடத்தப்பட்டு வந் தார்கள். பெண்களை இழிவுபடுத்திப் பேசும் அதர்மத்தை அவர் ஒழித்தார். பெண்களைச் சக்தி சொருபமாகப் பாவித்து அவர்களை வணங்க வேண்டும் என்பதை அவர் வாழ்க் கையில் நிருபித்துக் காட்டினார். பெண்களுக்கு ஆண்களைப் போலவே பூரண சுதந்திரம் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார். தம் வாழ்க்கைத் துணைவியாகிய சாரதாதேவி யாரைத் தெய்வமாக வைத்துப் பூஜை செய்து விழுந்து வணங்கினார். சாரதா தேவியாருக்குப் பூரண சுதந்திரமும் அளித்திருந்தார். பெண் களைத் தெய்வமாகப் போற்றியவர் ஸ்ரீ ராம கிருஷ்ணராவார்.

காமமும், காஞ்சனமும் மனிதனை அதர்மத் தின்கண் இழுத்துச் செல்கின்றன. காசு ஆசை யும் உடல் ஆசையும் மிகப் பொல்லாதவை. அவ்விரு ஆசைகளையும் அறவே அழித்துத் தள்ளுவதன் மூலம் மனிதன் தர்மவானாகின் றான். ஸ்ரீ ராமகிருஷ்ணர் காமத்தையும், காஞ் சனத்தையும் அறவே ஒழித்துத் தள்ளினார். காசைத் தொட முடியாதளவு அவருடைய உடலும் செயல்பட்டு வந்தது. காமத்தை முற்றும் தகனம் பண்ணிவிட்டார். காமம் அவரிடத்தில் பக்தி உணர்வாக வடிவெடுத்து இருந்தது. ஒரு கையில் மண்ணையும், மற் றொரு கையில் பொன்னையும் எடுத்துக் கொண்டு "மனமே, இவ்விரண்டும் ஒன்று. இவற்றினிடத்தில் வேற்றுமையை நீ காண வேண்டாம்" என்று இரண்டையும் கங்கையில் விட்டெறிந்தார். பணத்தை நம்பிகொலை, களவு போன்ற அதர்மச் செயல்களைச் செய்து வரு பவர்களைத் தர்மநெறிப்படுத்துவதற்குத் தூய தெய்வ நம்பிக்கையை ஊட்டி வந்தார். பொரு ளாசை, போகஆசை என்னும் அதர்மச் சிந் தனையை ஒழிக்கக்கடவுள் சிந்தனையை ஸ்ரீ ராம கிருஷ்ணர் மக்களிடையே வளர்த்தார்.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

187. गोविन्दः கோவிந்த:—ஜீவர்களின் முக்காலத்தையும் அறிபவர்.

புராண வரலாற்றின்படி ஜலப்ரளயம் ஏற்பட்டபொழுது அதனுள் இந்தப் பரந்த உலகம் மறைந்துபட்டுப்போயிற்று. அங்ஙனம் மறைந்து கிடந்த உலகத்தைக் கண்டுபிடித்தவர் நாராயணன். கோ என்னும் சொல் உலகைக் குறிக்கிறது. விந்த் என்னும் சொல் கண்டுபிடித்தவன் எனப்பொருள்படுகிறது. ஆகவே கோவிந்தன் என்னும் பதம் பூமியையும் அதில் மறைந்து கிடக்கும் பொருள்களையும் உள்ளபடி காண்பவன் எனப்பொருள்படுகிறது.

கோ என்னும் சொல் ஜீவாத்மனைக் குறிக்கிறது. ஜீவாத்மனே கிஞ்சிக்ஞன் சிற்றறிவு படைத்தவன். தன்னுடைய முக்கால வரலாற்றை ஜீவன் தான் அறிந்துகொள்ளமாட்டான். அத்தகைய ஜீவாத்மாவுடைய பழைய வரலாற்றையும் இப்பொழுதுள்ள நிலைமையையும் எதிர்காலத்தில் அவன் கதி எத்தகையதென்பதையும் பகவான் அறிகின்றார். ஆகையினால் கோவிந்தன் என்னும் சொல் ஜீவாத்மாவினுடைய முக்கால நிலைமைகளையும் உள்ளபடி அறிகின்றவன் எனப் பொருள்படுகிறது.

188. गोविदां पतिः — கோவிதாம் பதி: வேதத்தை அறிந்தவர்களுக்குத் தலைவன்.

வேதம் என்பதற்கு இயற்கை என்பது பொருள். இயற்கையை அறிபவர்கள் இயற்கையை நன்கு கையாள முடியும். இயற்கையிலுள்ள ஒவ்வொன்றையும் அறிந்து ஆள்பவர்களுக்குத் தேவர்கள் என்று பெயர். காற்றை ஆள்பவன் வாயுபகவான். நெருப்பை ஆள்பவன் அக்னிபகவானுகின்றான். மழையை ஆள்பவன் வருணபகவானுகின்றான். இக்காலத்தில் இயற்கையை அறிபவர்கள் விஞ்ஞானிகள் என அழைக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு எல்லாம் தலைவராக இருந்து இவர்களை இயக்கி வருபவர் விஷ்ணு ஆகின்றார். இவர்களுக்கு எல்லாம் சக்தி அவரிடமிருந்து தான் வருகிறது. இயற்கையாக இருக்கும் இப்பிரபஞ்சத்துக்கு அவரே தலைவராகின்றார். வேதம் என்பது ரிக்கு, யஜுர், சாம, அதர்வண என்ற நான்கு வேதங்களையும் குறிக்கும். இயற்கையை அறிவதும், நூல்மயமாக இருக்கும் வேதங்களை அறிவதும் இவற்றிற்கெல்லாம் நாயகனாக இருக்கும் இறைவனை அறிந்தது ஆகாது. ஆனால் அவைகளை அறிவதன் மூலம் அவற்றிற்கெல்லாம் நாயகனாக இருப்பவர் மகிமையை அறிகிறோம். வேதத்தை அறிவதோடு நின்றுவிடாமல் வேதத்துக்கு எல்லாம் அப்பால் வேதாந்த சொரூபமாக இருக்கின்ற பரமாத்மனை அறிவதே மெய்யறிவு ஆகும். வேதாந்த சொரூபமாக இருக்கின்ற வேதநாயகனுக்கு நாம் வழிபாடு செய்வோமாக.

189. मरीचिः மரீசி: — ஒளி வடிவானவர்.

ஒளிகளுக்கு எல்லாம் ஒளியாக இருப்பது தேஜஸ் என்று அழைக்கப்படுகிறது. ஆரோக்யம், இந்திரியநிக்ரஹம், பிரம்மச்சரியம் முதலியவைகளினின்றும் உண்டாகும் அழகும், மனத் தெளிவும், செயலாற்றும் வன்மையும் சேர்ந்து தேஜஸ் ஆகின்றன. கட்டுப்பாடும், ஒழுங்குப்பாடும் உடைய வாழ்க்கையை வாழ்ந்து வருபவர்கள் தேஜஸைப் பெறுகின்றனர். அவர்கள்தாம் தேஜோமயமாக இருக்கின்ற இறைவனை உணர முடியும். வாழ்க்கையைத் தேஜோமயமாக்குகின்றவர்கள் தேஜோமயமாக இருக்கின்ற இறைவனை உபாசிக்கின்றவர்களாகிறார்கள்.

புலனடக்கத்தின் மூலம் சரீரசக்திகளெல்லாம் மனோ சக்தியாக மாறுகின்றன. மனோ சக்தியை ஆத்ம தியானத்தின் மூலம் ஆத்ம சக்தியாக மாற்றவேண்டும். அந்த ஆத்ம சக்தி தான் தேஜஸ் என்றும், ஓஜஸ் என்றும் அழைக்கப்படுகிறது. ஆத்ம சக்தியைப் பெற்றவர்களுக்குப் பேராற்றல் உரியதாகிறது. ஆத்ம சக்தியைப் பெற்றவர்கள் மனத் தெளிவு பெறுகிறார்கள். அவர்களை மாயாசக்தி மயக்குவதில்லை. மாயா சக்தியின் மயக்கத்தினின்று விடுபடுவதற்கு ஆத்மஒளி என்னும் தேஜஸைப் பெறவேண்டும். அந்தத் தேஜஸின் உதவியைக் கொண்டுதான் மாயையை வெல்ல முடியும்.

190. दमनः தமன: — உயிர்களை நன்னெறியில் செலுத்துபவர்.

உயிர்கள் செய்த குற்றங்களுக்குச் செத்த

பின்பு தண்டனை கொடுப்பவர் யமதர்மராஜா என்று அழைக்கப்படுகின்றார். உயிர் வாழ்ந் திருக்கும் பொழுது குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பது அரசனுடைய செங்கோல் ஆகி றது. உயிர்களைத் திருத்தி அமைப்பதற்கு முறையான தண்டனை கொடுப்பது அவசிய மாகிறது. முறையான தண்டனை கொடுப் பதற்கு அறிகுறியாய் இருப்பது செங்கோல் ஆகும். குற்றத்திற்கு ஏற்ற தண்டனை விதிக் கப்படும்பொழுது குற்றவாளியானவன் யார் மீதும் குறைகூறுது தண்டனையை ஏற்றுக் கொள்கின்றான். அத்தண்டனை அவனைச் சீர் திருத்தி அமைக்கின்றது.

நெறியான வாழ்க்கை வாழாதவர்களுக்கு நோய், துன்பம் என்னும் தண்டனை வருகிறது. நோய் உடலைத் திருத்தி அமைக்கிறது. துன் பம் உள்ளத்தைத் திருத்தி அமைக்கிறது. உயிர்கள் திருந்தி அமைகின்றவரையிலும் தண்டனை வந்துகொண்டே இருக்கும். உயிர் களை நன்னெறியில் செலுத்துவதற்கு ஈசன் தண்டனை சொரூபமாக இருந்து வருகிறார். முறையாகத் தண்டிக்கிறவர்கள் ஈசனுடைய காரியத்தைச் செய்கின்றார்கள். எனவே அவர் கள் ஈசனுடைய அருளுக்குப் பாத்திரமாகின் றார்கள்.

191. ஹ்ஸ: ஹம்ஸ: பிறவிப் பிணியிலிருந்து காப்பாற்றுபவர்.

ஜீவர்களிடத்து ஆத்மன் சாக்ஷிமயமாகவி ருந்து ஜீவர்களின் செயலைக் கண்காணித்துவரு கின்றார். ஜீவர்கள் தங்களிடத்திலிருக்கும் ஆத் மனை அறிந்துகொள்ள முடியாது புலன்களின் மூலம் ஏற்படும் இன்ப நுகர்ச்சிகளைப் பின்பற் றிச் செல்கின்றனர். அத்தகைய அறிவிலிகள் மரண வலையில் வீழ்கின்றனர். இந்திரிய இன்ப நுகர்ச்சிகளை வென்று மனதை அந்தர்முகமாகத் திருப்பி ஆத்மனிடத்தில் செலுத்துபவர்கள் தீரர்களாகின்றார்கள். அவர்கள் அழிவற்ற உண்மைப் பொருளாகிய ஆத்மனை அறிந்து ஆத்மனில் திருப்தியுற்று இருக்கின்றார்கள். அவர்கள் இவ்வுலக வாழ்க்கையையோ இந்திரி யங்கள் மூலம் உண்டாகும் இன்ப நுகர்ச்சி யையோ நிலையற்றன என்று எண்ணி அவை களை நாடுவதில்லை. சிற்றின்பத்தைத் தரும் இந்திரிய இன்ப நுகர்ச்சியையும், உலக சுகத் தையும் ஒதுக்கித் தள்ளி விட்டுத் தம்மை நாடி வரும் உயிர்களை ஆத்மன் சம்சாரசாகரத்தி னின்றும் காப்பாற்றுகின்றார்.

“ பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார் ”

என்பது பொய்யாமொழி.

ஸ்ரீ தேவீ மாஹாத்மியம்

या देवी सर्वभूतेषु बुद्धिरूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு புத்திரூபேண ஸம்ஸ்திதா ।
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம: ॥
या देवी सर्वभूतेषु शक्तिरूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு சக்திரூபேண ஸம்ஸ்திதா ।
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம: ॥
या देवी सर्वभूतेषु शान्तिरूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு சாந்திரூபேண ஸம்ஸ்திதா ।
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம: ॥
या देवी सर्वभूतेषु श्रद्धारूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு ச்ரத்தாரூபேண ஸம்ஸ்திதா ।
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம: ॥
या देवी सर्वभूतेषु दयारूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு தயாரூபேண ஸம்ஸ்திதா ।
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம: ॥
या देवी सर्वभूतेषु तुष्टिरूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு துஷ்டிரூபேண ஸம்ஸ்திதா ।
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம: ॥
या देवी सर्वभूतेषु मातृरूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு மாத்ருரூபேண ஸம்ஸ்திதா ।
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம: ॥

புத்தி, சக்தி, சாந்தி, சிரத்தை, தயை, திருப்தி, தாய் வடிவங்களாக எந்தத் தேவி எல்லா உயிர்களிடத்தும் உறைகின்றுளோ அவளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம்.

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

பூதகி என்னும் அரக்கி என் ஆண்டவனுக்கு அன்பான தாய்போன்று பாலூட்டினாள். அவளது பால் விஷம், எண்ணமோ அச்சிசுவைக் கொன்றுவிடவேண்டும் என்பது. ஆனால் அந்த அரக்கிக்கும் என் ஆண்டவன் தன்னை வளர்த்த பெற்ற தாய்களுக்கு அருளிய பெருநிலையை அருளினான். இத்தகைய அன்புக் கடவுளை, கருணாமூர்த்தியை, தயாநிதியை அன்றி வேறு யாருக்கும் நாம் அடிமை செய்யோம், சரணடையோம். அசுரர்களும் ஒருவிதத்தில் ஆண்டவனின் பக்தர்களே என்று நான் கருதுகிறேன். ஆண்டவன் அவர்களிடத்தும் கருணை காட்டுவதில் ஆச்சரியம் ஏதுமில்லை. அவர்களும் ஆண்டவனின் அருளுக்குத் தகுதி வாய்ந்தவர்களே ஆவார்கள். பக்தன் அன்பினால் ஆண்டவன்பால் தன் மனதைக் குவிக்கிறான். அசுரனோ கோபம், வெறுப்பு, விரோத பாவனையில் ஆண்டவன்பால் தன் மனதைக் குவிக்கிறான். அவர்கள் என் ஆண்டவனோடு முரண்பட்டுக் கொண்டு போர்க்களத்தில் போர்புரிகிறார்கள். போர்க்களத்தில் அவர்கள் கருடவாகனத்தில் சங்குசக்கர கதாதாரியாய் என் ஆண்டவனைக் காண்கிறார்கள். கடவுள்பால் மனதைக் குவிப்பதும், அவனுடைய தர்சனத்தைப் பெறுவதும் எளிய காரியங்கள் அல்ல. அவர்கள் விரோதம் பாராட்டிய பொருள் கடவுள். முடிவில் எல்லாம் கடவுள் மயம் ஆய்விடுகின்றன.

அன்பான விதுரா, பிரம்ம தேவரால் பிரார்த்திக்கப்பட்டவராய், உலகின் துயர் துடைப்பதற்காக இப்பிரபஞ்சத்தின் நாயகன், என் பிரபு போஜர்களின் அரசனாகிய கம்சனின் சிறையில் வசுதேவருக்கும் தேவகிக்கும் மகனாகப் பிறந்தார். அந்தக் குழந்தையை வசுதேவர் கம்ஸனுக்குப் பயந்து பிருந்தாவனத்துக்குத் தன் நண்பன் நந்தனிடம் கொண்டுபோய் ஒப்படைத்தார். அங்கு என் ஆண்டவன் பதினொரு வருஷங்கள் தன் மூத்தவனாகிய பலராமனுடன் வளர்க்கப்பட்டான். கம்ஸனும் அவனது அசுர சகாக்களும் அவனைக் கண்டுகொள்ள முடியவில்லை. என் ஆண்டவன் எடுத்த மானுட சரீரத்துக்குக் குழந்தை, தவழும் பருவம், மழலைப்பருவம், ஓடி விளையாடும் பருவம் என்கிற வளர்ச்சி உண்டு. ஆனால் அவனது தெய்வீக மகிமைக்கு, தெய்வீக சக்திக்கு, தெய்வீகத் தன்மைக்கு வளர்ச்சி உண்டா, தேய்வு உண்டா ஒரு நாளும் இல்லை. ஆகவே அவனது சக்தி, அன்பு, அறிவு, ஆற்றல் மூடப்படாமல், குறைவுபடாமல் என்றுமே செயல்பட்டுக் கொண்டிருந்தது. என் பிரபு தன் சகாக்களாகிய கோபாலர்களுடன் வனத்துக்கு மாடு மேய்க்கப்போவான். மாடுகள் மகிழ்ச்சியாக மேயும். என் ஆண்டவனும் கோபாலர்களும் வனத்தில் உற்சாகமாக மகிழ்ச்சியாகத் துள்ளித் திரிவார்கள், விளையாடுவார்கள். அந்த வனம் என்ன பாக்கியம் செய்ததோ! கள்ளம் கபடமற்ற அச்சிறுவர்களின் குதூகலமான ஆனந்த ஒலியும், அவ்வனத்தில் வாழும் பறவைகளின் மகிழ்ச்சி ஒலியும் கலந்து வனமெங்கும் இனிமையாக ஒலிக்கும். அச்சிறுவர்கள் மரத்தில் ஏறிக்குதிப்பது அம்மரமாகிய தாய்க்குத் தன் குழந்தை மடியில், தோளில் ஏறிக் குதிப்பதற்கு ஒப்பப் பேர் ஆனந்தத்தையும் பேர் அன்பையும் உண்டாக்கும். பறவைகளை விரட்டுவதும் பிடிக்க ஓடுவதும் அப்பறவைகளுக்குப் பேரானந்தத்தை ஊட்டின. பசுக்களை என் பிரபு நெற்றியில், முதுகில், கழுத்தில் தடவிக் கொடுப்பான். அவைகள் தியானத்தில் இருப்பனபோன்று ஆனந்தத்தில் தம்மை மறந்து நின்றன. அவன் ஆனந்தத்தால் சிரிப்பான், பொய்யாக அழுவான் அவனது ஒலி வனமெங்கும் எதிரொலிக்கும். அவ்வனத்தின் தாவரம், பறவை, விலங்குகள், புழுதி, நீர் நிலைகள், காற்று, எல்லாம் ஒரே மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருந்தன. பாற்கடலில் பள்ளிகொண்ட அப்பரந்தாமன் வெள்ளைவெளேரென்று இருந்த பசுக்கூட்டத்துக்கு நடுவில் கம்பீரமாக நின்றுகொண்டிருந்தான். அந்த அழகை என்னென்பது! சௌந்தர்யம் அனைத்தும் அங்கு ஒன்றுகூடி மகிழ்ந்தன. அவன் அழகுத் தெய்வம். தனது புல்லாங்குழலை ஊதி தன் சகாக்களை அழைப்பான். அவன் குரல் இனிது, அவன் குழல் இனிது, அவன் காட்சி

இனிது, அவன் மழலை இனிது, அவன் சிரிப்பு இனிது, அவனது குறும்பு இனிது, அவன் இனியனவற்றுக்கெல்லாம் இனிமை தருபவன். குழந்தை ஒன்று தென்னம் ஓலையில் செய்த கிளியை, புல்லில் செய்த சிம்மம் போன்ற பொம்மை விலங்குகளை எளிதில் பிய்த்து எறிவதுபோன்று என் ஆண்டவன் கம்ஸனால் ஏவப்பட்டு வந்த, இஷ்டம் போல் வடிவெடுக்க வல்ல கொடிய அசுரர்களை எல்லாம் சம்ஹரித்தான். யமுனையின் தண்ணீர் காளியன் என்கிற விஷசர்ப்பத்தால் அருந்த முடியாதபடி விஷம் கலந்தது ஆகிவிட்டது. கால் நடைகளும் கோபால சிறுவர்களும் அந் நீரைப் பருகி மயங்கி விழுந்துவிட்டார்கள். என் பிரபு யமுனையின் மடுவில் குதித்து அக்காளியங்கனைக் கொன்றான். அவனைக் கொண்டே யமுனா நீரையெல்லாம் விஷமற்றதாக்கி அந் நீரைத் தெளித்து என் பிரபு யாவரையும் தெளிவித்தான், உயிர்ப்பித்தான். தன் தந்தையாரின் அளப்பரிய செல்வம் நல்ல காரியத்துக்குப் பயன்படவும் இந்திரனின் மமதையை அழிக்கவும் என் ஆண்டவன் நந்தனைக் கோபூஜை, கோவர்த்தன பூஜை செய்யச் செய்தார். என் ஆண்டவன் அப்பூஜையை மங்களமாக முடித்து வைத்தார். இதைக்கண்டு கோபமடைந்த இந்திரன் பிருந்தாவனத்தில் இடைவிடாத கனமழையைப் பெய்வித்தான். ஊழிக்காலம் வந்து விட்டது போன்ற குளிர், நீர்ப்பெருக்கு, காற்று எல்லாம் ஒன்று சேர்ந்தன. பிருந்தாவனவாசிகள் பெரும் பீதியடைந்தார்கள். என் பிரபு மிகமிக எளிதில் தன் சுண்டு விரலால் கோவர்த்தனகிரியை உயர்த்திக் குடைபோன்று தாங்கிப்பிடித்தான். கோபாலர்கள் யாவரும் மிகவும் பாதுகாப்பாக, சந்தோஷமாக அதன் கீழ் வாழ்ந்தார்கள். வசந்த காலத்தில் பௌர்ணமி முழு நிலாவில், என் பிரபு தன் இனிய வேணு கானத்தை வனமெங்கும் ஒலிக்கச் செய்தான். குளிர்ந்த வெள்ளி வெளிச்சத்தில் மரங்களும் அவைகளின் நிழலும், யமுனையின் அகன்ற நீர்ப்பரப்பும் அதில் நிலா வெளிச்சத்தின் பிரதிபலிப்பும் ஆனந்தக் கனவு உலகம் போன்று இருந்தது. கோபிகாஸ்திரீகள் அனைவரும் அவ்வனத்தில் கிருஷ்ணனைச் சூழ்ந்து உட்கார்ந்துகொண்டு அவ் ஆனந்த ஆத்ம கீதத்தை, ஆனந்தக் காட்சியை, அழகு தெய்வத்தைப் பார்த்துக்கொண்டே சொக்கிப் போய் உட்கார்ந்திருந்தார்கள். ஞானி தியானம் செய்து தன் இஷ்டமூர்த்தியின் காட்சியை மனதில் காண்கிறான். அந்தப் புண்ணியவதிகள் பாக்கியவதிகள் தங்கள் இஷ்ட மூர்த்தியை மனங்குளிர ஸ்தூலக்கண்ணாலேயே பார்த்து மகிழ்ந்து உட்கார்ந்திருந்தார்கள்.

ஸ்கந்தம் 3 அத்தியாயம் 3

உத்தவர் சொன்னார்:—விதுரா, தன் அண்ணாவான பலராமன் பின்தொடரக் கிருஷ்ணன் மதுராபுரியினுள் பிரவேசித்தார். தன் பெற்றோரை மகிழ்வித்தல்பொருட்டுச் சிம்மாசனத்தில் இருந்து கம்சனைக் கீழே உருட்டித் தள்ளினார். கீழே தள்ளப்பட்ட வேகத்திலேயே கம்ஸன் இறந்தான். தன் பெற்றோரையும் பக்தர்களையும் துன்புறுத்தினவன் அல்லவா கம்சன்! என் பிரபு அவனைத் தரையில் சிறிது தூரம் இழுத்துக்கொண்டு போனார். என் பிரபு மிகவும் கீர்த்தி வாய்ந்த சாந்தீபனி முனிவரிடம் கல்விபயின்றார். என் பிரபு அறிவு சொரூபம்; சித் சொரூபம் அல்லவா. சாந்தீபனி முனிவர் போதிப்பதற்கு முன்னரே என் ஆண்டவன் எல்லா வேதங்களையும் அதன் ஆறு அங்கங்களுடன் தெரிந்துகொண்டார். அவரிடமிருந்து அல்லவா அவைகள் வெளிவந்துள்ளன. தன் குருவுக்குக் குருதக்ஷிணையாக அவரது திருக்குமாரனைத் தன்வயிற்றில்ஒளித்து வைத்திருந்த பாஞ்சஜன்யன் என்கிற அசுரனைக்கொன்று குருபுத்திரனை மீட்டுத் தந்தார். பேர் அரசன் பீஷ்மகனின் புத்திரி ருக்மணியின் அன்புக்குக் கட்டுப்பட்டவராய்க் கூடியிருந்த க்ஷத்திரிய அரசர்களையெல்லாம் புயல் காற்றுப் போலச் சிதற அடித்து விட்டு ருக்மணியை ஆட்கொண்டார். அவள் என் ஆண்டவனின் அன்பின் புறத்தோற்றம், ஸ்ரீதேவியின் அவதாரம் ஆவாள். நக்னஜித்தின் சுயம்வரத்தில் என் பிரபுமூக்கணாங்கயிறு இல்லாத ஏழு முரட்டுக் காளைகளை எளிதில் அடக்கினான். கூடியிருந்த அரசர்கள் என் ஆண்டவனை எதிர்த்து மாண்டார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் ஒருதடவை அதிதிக்கு இரண்டு தோடுகளைத் தருவதற்காகச் சொர்க்கலோகத்துக்குப் போனார். என் ஆண்டவன் இப்பிரபஞ்

சத்துக்கு நாயகன், ஏகன், தான் தனியன். சுதந்திரபுருஷன், மனைவிக்குக் கட்டுப்பட்டு நடப்பவன் போன்று தன் மனைவி சத்யபாமையின் விருப்பப்படி தேவலோக விருக்ஷமாகிய சிறந்த பாரிஜாத புஷ்பச்செடியைப் பூலோகத்துக்குக் கொண்டுவந்தார். வஜ்ஜிரதரன் ஆகிய இந்திரன் இந்திராணியின் பொருட்டு அந்தத் தேவலோக புஷ்பச் செடியை மீட்பதற்காக என் ஆண்டவனேடு யுத்தத்துக்கு வந்தான்.

ஓ விதுரா, பூமாதேவியின் புதல்வனுகிய நரகாசுரன் ஆகாயத்தை விழுங்கப்போன தறுவாயில் என் பிரபு தன் சுதர்சனசக்கரத்தால் கொன்ருர். தன் மகன் ஆண்டவனல் கொல்லப்பட்டதை அறிந்து பூமாதேவி ஸ்ரீ கிருஷ்ணனைத் துதித்தாள். அவளது வழிபாட்டில், பிரார்த்தனையில் திருப்தி அடைந்த என் ஆண்டவன் நரகாசுரனின் மகன் பகதத்தனை அரசனுக்கினுர். நரகாசுரனல் சிறை படுத்தப்பட்டு அவனது அந்தப்புரத்தில் அடைத்து வைக்கப்பட்டிருந்த பல ராஜகுமாரிகளை என் பிரபு விடுவித்தான். அவர்கள் அனைவரும் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். தங்களைச் சிறை மீட்டவன் தங்கள் காவலன் அல்லவா, தங்கள் சிறை வாழ்வு என்னும் தௌர்பாக்கியம் தங்களுக்கு அளித்த சன்மானத்தை,நன்மையை அவர்கள் எண்ணி மகிழ்ந்தார்கள். அவர்கள் அனைவரும் என் பிரபுவைத் தங்கள் நாயகனுக ஏற்றுக்கொண்டார்கள், வரித்தார்கள். ஆபத்பாந்தவன், தீனபந்து, தீனரக்ஷகனுகிய என் பிரபு அவர்களை ஏற்றுக்கொண்டான். அவர்க்ள் ஒவ்வொருவரும் தனித்தனி மாளிகையில் வாழ்ந்தார்கள். என் பிரபு அவர்களின் பொருட்டு ஏக காலத்தில் அத்தனை கிருஷ்ணர்கள் ஆகி ஒவ்வொருவருக்கும் உரிய கடமையைச் செய்தான். அவனது மாயையை யாரே அறிய வல்லார்! அவர்களுக்கு ஏராளமான புத்திர சம்பத்தை அருளினுன். அவர்கள் ஒவ்வொருவரும் என் பிரபுவின் எல்லா அருங்குணங்களும் வாய்க்கப்பெற்றவர்களாக இருந்தார்கள். மதுராநகரம் காளியவான், ஜராசந்தன், சால்வன் ஆகிய வல்லமையான பேரரசர்களின் படைகளால் முற்றுகை செய்யப்பட்டபோது முசுகுந்தனை முகாமையாக வைத்து என் பிரபு அப்படை முழுவதையும் கொன்றுவிட்டார். இதன் மூலம் யாதவர்களின் மதிப்பும் செல்வாக்கும் வல்லமையும் பன்மடங்கு அதிகமாயின. சம்பரன்,துவிவிதன், பாணன், மூரா, பால்கலா, தந்தவக்ரன் மற்றும் பல அசுரர்கள் என் பிரபுவால் கொல்லப்பட்டார்கள். மீதமிருந்த அசுரர்களை எல்லாம் பலராமனும், பிரத்யும்னனும் அழித்தார்கள்.

என் அன்பான விதுரா,பாண்டவர் கௌரவர் ஆகிய இருகட்சியிலும் இருந்த எல்லா அரசர்களும் என் பிரபுவாலேயே மாய்க்கப்பட்டவர்களாகிருர்கள். அந்த அரசர்களின் எண்ணிக்கை சிறியதன்று. அந்த அரசர்களும் அவர்கள் படைகளும் குரு க்ஷேத்திரப் போர்க்களத்துக்கு வந்து சேர்ந்தபோது இப்பூமியே அசைவதாயிற்று. கர்ணன், துச்சாதனன், சகுனி இவர்களின் துர்போதனையால் துரியோதனன் பிடிவாதக்காரனுகவும் பேராசைக்காரனுகவும் ஆகிவிட்டான். யுத்தத்தின் முடிவில் துரியோதனன் தன் தொடைகள் பிளக்கப்பட்டு யுத்த களத்தில் வீழ்ந்தான். அவனது படைகள் முழுவதும் நாசமாகி விட்டன. துரியோதனன் பரிதாபமான நிலையில், நிராதரவான நிலையில் இருப்பதைப் பார்த்து என் பிரபு மகிழ்ச்சி அடையவில்லை. அவருக்கு வருத்தமே உண்டாயிற்று. அவர் அப்போது "துரோணர், பீஷ்மர், அர்ஜுனன், பீமன் இவர்களால் பதினெட்டு அக்ஷௌஹிணி சேனை அழிக்கப்பட்டு இப்பூமியின் பாரம் துடைக்கப்பட்டது. ஆனல் அந்தோ பிரத்யும்னன் மற்றும் பெரிய யாதவ மகாரதர்களை நாயகர்களாக உடைய இந்த யாதவ சேனையின் பாரத்தோடு குரு க்ஷேத்திர சேனைகளைச் சீர்தூக்கவே முடியாது. அவ்வளவு பெரிய பூபாரமாகும் யாதவ சேனை. அவர்கள் என்னிடத்திலிருந்து தோன்றியவர்கள். நான் அவர்களிடையே தோன்றியிருப்பதால் அது பெரு வல்லமை படைத்ததாய் இருக்கிறது. அதன் பாரம் உலகுக்கு மிகப் பெரிய சுமை ஆகும். அவர்களை உலகில் எந்தச்சக்தியினுலும் அழிக்க முடியாது, ஆனல் அவர்கள் குடிவெறியில் ஒருவரை ஒருவர் தூஷித்து இரண்டு கட்சிகளாகப் பிரிந்து ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டு மடிவார்கள். அப்போது தான் யாதவ வம்சம் அழியும். இதைத் தவிர வேறு வழியில்லை. அவர்களின் உயிராக நான் இருந்து

வருகிறேன். நான் அவர்களை விட்டுப் பிரியும் போது அவர்கள் உள்ளத்தில் மனவேற்றுமை கள் கிளம்பும். ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டு மடிவார்கள்." என்று சொன்னர். என் பிரபு இங்ஙனம் எதிர்கால நிகழ்ச்சிகளை அறிந்து யுதிஷ்டிரனை சந்திரவம்சத்தில் ஹஸ் தினபுரத்து அரசனுக்கினர். யுதிஷ்டிரனுக்கு நீதி நூல், ராஜ தர்மம் எல்லாம் போதித்தருளி னர். அதன் மூலம் நல் அரசாட்சி ஏற்பட்டது. நல்லவர்கள் ஆனந்தமாக வாழ்ந்தார்கள்.

உத்தமனே, அஸ்வத்தாமனல் ஏவப்பட்ட பிரம்மாஸ்திரத்தினல் உத்தரையின் கர்ப்பத் திலிருந்த அபிமன்யு புத்திரன் அழிய இருந் தான். அத்துடன் புருவம்சமே அழிந்திருக்கும். ஆனல் என் பிரபு உத்தரையின் கர்ப்பத்தில் இருந்த சிசுவைக் காத்தருளினர். என் பிரபு யுதிஷ்டிரனை மூன்று அஸ்வமேத யாகங்கள் செய்ய வைத்தார். அவன் அருளால் நல்ல கிருஷ்ண பக்தனகிய யுதிஷ்டிரன் தன் இளைய வர்களுடன் கூடி சந்தோஷமாக நீதியாக ராஜ்யபரிபாலனம் பண்ணி வந்தார். இங்ஙனம் தம் காரியங்களை எல்லாம் முடித்தான பிறகு பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் துவாரகைக்குத் திரும் பினர். அங்கு மக்கள் நமது வேதங்கள், சாஸ் திரங்கள் விதித்துள்ள உயர்வான வாழ்க்கை முறையை அனுஷ்டித்து வந்தார்கள். சன்மார்க் கத்தில் நிலைபெற்றவர்களாக வாழ்ந்தார்கள். சாஸ்திரங்களை மதித்தார்கள், சான்றோர்களை மதித்தார்கள், சீலமான வாழ்வை மதித்தார் கள், உயர்வாகக் கருதினர்கள். என் ஆண்ட வனின் அன்பான பார்வை, மனமோஹனமான சிரிப்பு, தேனினும் இனிய மொழிகள், களங்க மற்ற நடத்தை ஆகிய மகிமைகளினல் என் பிரபு துவாரகா வாசிகளின் உள்ளம் கவர் கள்வ னக விளங்கினன். அவனது திருமார்பினில் வாழ்கின்ற மங்கை, லக்ஷ்மி தேவியின் கிருபை யினல் எல்லாச் செளபாக்கியங்களும் துவா ரகையில் பொங்கி வழிந்தன. செல்வச் செழிப் புக் கொழித்தது. துவாரகை சொர்க்கலோகம் போன்று விளங்கியது.என்பிரபுவின் ஒவ்வொரு செயலும், சொல்லும், அவனது நடவடிக்கை கள் எல்லாமும் மக்களைப் பரவசப்படுத்தின. இங்ஙனம் துவாரகை பல ஆண்டுகள் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியிருந்தது. குழந்தைக்கு விளையாட்டில் சலிப்புத் தட்டுவது போன்று தீராத விளையாட்டுப் பிள்ளையாகிய என் ஆண் டவனுக்கும் இந்தப் பூலோக லீலையில் சலிப்புத் தட்டியதோ! பெருத ஒன்றைப் பெறுதற்கோ அவன் இவ்வுலகுக்கு வந்தான்! அவன் ஹிருஷீ கேசன், பரமானந்தத்தில் நிலைபெற்றிருக்கும் பூரணன், கால தேச வர்த்தமானம் அவனைக் கட்டுப்படுத்தா. அவன் அவைகளைத் தாண் டியவன். காலத்திலும், சூழ்நிலையிலும், ஆசை யிலும், மாயையிலும் கட்டுப்பட்ட மக்கள், ஜீவர்கள் இன்பங்களைத் தேடுகிருர்கள், அனுப விக்கிருர்கள், சலிப்படைகிருர்கள். உலக இன் பங்களில், புலன் இன்பங்களில் நாட்டம் இருக் கும் வரை ஆத்ம சாதனம், தவ வாழ்வு, யோக வாழ்வு வாழ்வது என்பது சாத்யமில்லை. இரண்டு படகில் ஏக காலத்தில் பிரயாணம் பண்ண முடியாது. உலக விஷயங்களில் மனம் ஒடுங்கினல் அன்றிகடவுள்விஷயம்,சிரேயஸில் நாட்டம் எழ முடியாது. பிரேயஸும் அவனே சிரேயஸும் அவனே. அவன் லீலா வினே தன், மஹா மாயாவி. யாதவ குலத்தைத் துடைக்க அவன் திருவுளம் கொண்டான்.

யாதவ, போஜகுல ராஜகுமாரர்கள் ஒரு சமயம் ஒருவனத்தில் உல்லாசமாகப் பொழுது போக்கிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அங்கிருந்த துறவியர் கூட்டத்தைச் சிறுமைப் படுத்தி அவர்களுடைய கோபத்துக்கு ஆளா னர்கள்.என் பிரபுவின் திருவுளக் குறிப்பறிந்து அந்தத் துறவியர்கள் அந்த ராஜகுமாரர்களைச் சபித்தார்கள். இந்தச் சம்பவம் நடந்து பல மாதங்களுக்குப் பிறகு விருஷ்ணி, போஜ, அந்தக மற்றும் பல ராஜகுல மக்களும் மன மகிழ்ச்சியுடன் பிரபாஸா க்ஷேத்திரத்துக்குப் போனர்கள். அங்குப் புனித நீராடி, தேவர் களுக்கு, பித்ருக்களுக்கு, ரிஷிகளுக்கு வழிபாடு, தர்ப்பணம் முடித்தார்கள். அதன் பிறகு பிராம்மணர்களுக்கும் ஏழைகளுக்கும் தானம் செய்தார்கள். அவர்கள் வழங்கிய பொருள் களுக்கு, அளவு இல்லை. கடைசியாக அவர் கள் தங்களின் நற்கர்மங்களின் பயனையும் ஆண்டவனுக்கே அர்ப்பணித்தார்கள். தங்கள் தெய்வத்தின் முன்பு விழ்ந்து வணங்கினர்கள். அப்போது அவர்கள் உலக நன்மைக்காகவே வாழ்ந்து வருவது போன்று தென்பட்டார்கள்.

போசலபாவா சரிதம்

(225 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராதாரமணம் என்னும் ஊரில் மோதக மகான் என்னும் ஒருவன் இருந்தான். அவன் போசலபாவாவுக்கு உறவினனுவான். போசல பாவாவின் கொல்லைக்குப் பக்கத்தில் அவனுக் கும் நிலம் இருந்தது. தன் கொல்லையைக் காவல் செய்வதற்கு ஆசி என்னும் அடிமைப் பெண்ணை அவன் அனுப்பிவைத்தான். அவள் போசலபாவாவின் பக்தி விசேஷத்தையும், பெருமையையும் கேட்டு அவரை ஒப்பற்ற மகான் என்று மதித்து வந்தாள். போசல பாவாவிடம் சென்று அவருடைய பாதங் களில் வீழ்ந்து வணங்கினுள். "குழந்தாய்! நீ யார்? என்ன காரியமாக இங்கு வந் தாய்?" என்று கேட்டார். "சுவாமி, தங்கள் உறவினராகிய மோதகமகான் என்பவரின் அடிமைப் பெண் நான். அவருடைய சோளக் கொல்லைகளைக் காவல்புரிந்து வருகின்றேன். தங்களுடைய மகிமையையும், பகவத் பக்தி யையும், தங்கள் பஜனையில் கலந்து பலர் உய் வுற்று வருவதையும்பற்றிக் கேட்டு மகிழ்வு அடைந்தேன். எத்தனையோ பிறவிகள் எடுத்து நான் இளைத்துவிட்டேன். இப்பிறவியிலும் பகவத் கிருபையைப் பெருவிட்டால் இன்னும் பல ஜன்மங்கள் எடுத்து உழலவேண்டி இருக் கும். இப்பிறவியை இறுதிப் பிறவியாகத் தேவரீர் ஆக்கவேண்டும். அதற்குச் சிறந்த மருந்து தங்களிடமிருக்கிறது என்பதை அறி வேன். அடிமைப் பெண் என்று உதாசீனம் செய்து விடாதீர்கள். தேவரீரிடத்தில் உள்ள தொண்டர்களுள் என்னையும் ஒருத்தியாக ஏற் றுக்கொள்ளுங்கள். உங்கள் திருவடிகளைச் சரண் புகுந்தேன்" என்று வணங்கி நின்ருள். அவள் பக்தியைக்கண்டு போசலபாவா மன முருகினர். "என் அருமைக் குழந்தாய்! என் அன்பர்களில் ஒருத்தியாக உன்னை ஏற்றுக் கொண்டேன். நீ பாண்டுரங்கனிடம் பக்தி கொண்டுள்ளாய். நாள்தோறும் மாலையில் நிக ழும்பஜனையில் கலந்துகொண்டு உள்ளன்புடன் பகவானைத் துதிசெய்" என்று அவளுக்கு அன்பு வார்த்தைகள் கூறினர். அன்று முதல் அவள் சோளக் கொல்லையைப் பாதுகாத்துக் கொண்டு பஜனையிலும் கலந்துகொண்டாள். ஏகாதசி தோறும் பண்டரி சென்று பாண்டுரங் கனைத் தரிசித்து வந்தாள்.

அவளுடைய எஜமானன் மோதகமகான் காலமாகிவிட்டார். அவருக்கு இரண்டு சகோ தரர்கள் இருந்தார்கள். மூத்தவன் சத்சங்கத் தைச் சார்ந்தவனுக இருந்தான். சாதுக்களை வணங்கிவந்தான். அவனுடைய தம்பி நேர் மாருன குணங்கள் படைத்திருந்தான். அவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டு சொத் துக்களைத் தங்களுக்கிடையில் பிரித்துக்கொண் டார்கள். அடிமைப் பெண்ணுன ஆசியை விலைக்கு விற்று அதனுல் வரும் பணத்தைத் தங்களுக்கிடையில் பிரித்துக்கொள்ளத் தீர் மானித்தனர். இதனைக் கேட்டு ஆசி மிகவும் வருத்தமடைந்தாள். அவள் போசலபாவா வைப் பணிந்து "சுவாமி, மோதகமகான் இறந்து போனுர். அது எனக்கு மிகவும் வருத் தத்தைத் தருகிறது. அவருடைய இரண்டு சகோதரர்கள் என்னை விலைக்கு விற்றுவிடத் தீர்மானம் செய்துள்ளார்கள். என்னை விற்று விடுவார்களானுல் நான் உங்களைவிட்டுப் பிரிய நேரிடும். அப்பிரிவை நான் தாங்கமுடியாது. இப்பொழுதுள்ள யஜமானர்கள் என்னை விற்று விடாதிருக்க நீங்கள்தான் வழிவகுக்கவேண் டும்" என்று வேண்டினுள். "குழந்தாய்! வருந்த வேண்டாம். நம் பாண்டுரங்கன் பண்டரிபுரத் தில் அல்லது இந்தப் பஜனைக்கூட்டத்தில் தான் இருக்கிருர் என்று நினைக்கின்ருயா? அவர் எங்கும் எப்பொருளிலும் வியாபித்திருக் கிருர். உன் உள்ளும், என் உள்ளும் அவர் தாம் இருக்கிருர். கவலைப்படவேண்டாம். எங்குச் சென்ருலும் அவரை விடாது தியா னித்துவா. அவர் உன்னைக் கைவிடமாட்டார். கவலைப்படவேண்டாம்" என்று போசலபாவா கூறினர். "பெரியோரே! தாங்கள் சொன் னவை யெல்லாம் உண்மையே. பாண்டுரங் கனைப் போன்று உங்கள் பஜனைக் கூட்டமும் எனக்கு முக்கியமானதாகும். பஜனைக்கூட் டத்தை வைகுந்தத்துக்கு ஒப்பாகக் கருதுகின் றேன். இங்குத் தாங்கள் பாடும் கீதத்தைப்

பரமபதத்திலிருந்து வீசும் காற்றாகக் கருதுகின்றேன். எனவே நான் இவ்விடத்தைவிட்டு எப்படிப் போகமுடியும்? தாங்கள் எப்படியாவது என் யஜமானர்கள் என்னைப் பிறருக்கு விற்பதினின்று தடுக்கவேண்டும்'' என்று வேண்டிக்கொண்டாள். பிறகு அவள் மமதாபாயிடம் சென்று "தாயே! உங்களைவிட்டுப் பிரியும் சந்தர்ப்பம் வந்துவிட்டது. என் யஜமானர்கள் என்னை விலைக்கு விற்றுவிடத் தீர்மானித்திருக்கிறார்கள். தங்கள் நாயகனிடம் கூறி உரிய விலைகொடுத்து என்னை நீங்களே வாங்கிவிடுங்கள்'' என்று கூறிக் கண்ணீர் உகுத்து நின்றாள். மமதாபாய் அவளை அணைத்துக்கொண்டு "என் செல்வி, நான் உன்னை என் உயிராகக் கருதி வருகின்றேன். கவலைப்படவேண்டாம். நான் இதற்கு வேண்டிய ஏற்பாடு செய்கின்றேன்'' என்று அவளுக்கு ஆறுதல் கூறினாள். மமதாபாய் தன் கணவனிடம் சென்று "ஆசி நம்மைத் தாய் தந்தையராகக் கருதிவருகின்றாள். நமது சொத்து முழுவதையும் கொடுத்தாவது இவளை விலைக்கு வாங்கிவிடுவது உத்தமம்'' என்று கூறினாள். போசலபாவாவும் அதற்குச் சம்மதித்தார்.

போசலபாவா ராதாரமண கிராமத்திற்குச் சென்று தமது பந்துக்களிடம் கூறியதாவது: "நீங்கள் ஆசி என்னும் பெண்ணை விற்றுவிடப் போவதாகக் கேள்விப்பட்டேன். அவள் மிகவும் வருத்தப் படுகின்றாள். அவள் உத்தம குணம் படைத்தவள். பண்டரிநாதனைத் துதிப்பவள். அவள் மனம் புண்பட்டால் நம் குலம் அழிந்துபோய்விடும். அவளை விற்றுத் தான் ஆகவேண்டும் என்றால் என்ன விலை கொடுத்தும் நான் அவளை வாங்குவதற்குச் சித்தமாக இருக்கின்றேன்.'' அதற்கு அவர்கள் கூறியதாவது: "உம்மால் தான் அவள் கெட்டுப்போய் விட்டாள். எப்பொழுதும் 'விட்டல், விட்டல்' என்று கூறிக் கொண்டே இருக்கின்றாள். எனவே அவளை உமக்கு விற்கமாட்டோம்'' என்று மறுத்து விட்டனர். போசலபாவா இதைக் கேட்டுத் தம் ஊருக்குப் புறப்படும் பொழுது ஆசி அவர் கால்களில் வீழ்ந்து "என்னைக் கைவிட்டு விட்டீர்களே, இனி நான் என் செய்வேன்'' என்று அழுதாள். "மகளே, உன்னைக் கைவிடுவேனா! உன்னை அழைத்துப் போவதற்கு ஏற்ற உபாயம் கண்டுபிடித்துள்ளேன். நீ பாண்டுரங்கனுக்கு உகந்தவள் ஆதலால் உன்னை அவரே வந்து அழைத்துப் போவார். நீ சிறிதும் கவலைப்படவேண்டாம்'' என்று போசலபாவா அவளுக்குச் சமாதானம் சொல்லிவிட்டுப் போனார். வீட்டுக்குப் போனதும், "இறைவா, ஆசி என்னும் பெண்ணை நீ ஆட்கொள்ளுதல் வேண்டும்'' என்று பிரார்த்தித்துக்கொண்டார்.

ஆசியை விலைகொடுத்து வாங்கிய வர்த்தகன் அவளை அழைத்துப்போக எத்தனித்த போது ஆசி பகர்ந்ததாவது: "இது நியாயமா? ஆடுமாடுகளை விலைகொடுத்து வாங்குவது போன்று மனிதனை விலை கொடுத்து வாங்குவதா? இறைவா, உன்னை அடைவதற்கே மனிதப் பிறவி அமைந்துள்ளது. அடிமை வாழ்வு வாழ்வதற்கு மனிதன் பிறந்தவனல்லன். பொருளாசை பிடித்த மக்கள் மானுடப் பிறவியை வீணாக்குகிறார்கள். நான் உன்னைத் தஞ்சமடைந்துள்ளேன். நான் உனக்கு அடிமையேயன்றிப் பொருள் பற்றுடைய மக்களுக்கு அடிமையாகமாட்டேன்'' என்றுஅவள் பிரார்த்தித்தாள். அப்பொழுது "பக்த சிகாமணியே! உன்னை இந்த ஆபத்தினின்று விடுவிக்கவே என்னைப் போசலபாவா அனுப்பியிருக்கிறார். எனவே நீ என்னுடன் வருவாயாக'' என்று ஓர் அந்தணன் அங்கு வந்து ஆசியை அழைத்தார். பண்டரிநாதன் அவ் அந்தணன் வடிவத்தில் வந்துள்ளார் என்பதை அறிந்த ஆசி "இதோ, வந்து விட்டேன்'' என்று கூறி முடிப்பதற்குள் அவ்அந்தணனும், ஆசியும் மாயமாய் மறைந்து போய்விட்டனர். பணங்கொடுத்து வாங்கிய வர்த்தகனுக்கும் ஆசியின் சகோதரர்களுக்கும் பணத்தைக் குறித்து சர்ச்சை நிகழ்ந்தது. விலை கூறப்பட்ட தொகையை விற்றவனும், வாங்கியவனும் பகிர்ந்துகொள்ளுமாறு மத்தியஸ்தம் செய்து பெரியவர்கள் அவர்களைச் சமாதானப்படுத்தினர்.

ஆசி இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட செய்தியறிந்து போசலபாவா மகிழ்ச்சியடைந்தார். பஜனையிலும் பக்தியிலும் போசலபாவா ஆழ்ந்து ஈடுபட்டுத் தம் வாழ்நாளைக் கழித்து வந்தார்.

பண்பட்ட மனமே பகவத்தரிசனம் செய்யத்

தகுதி உடையது. மனம் பண்பாடு அடையாத வர்கள் யாருடைய உபதேசத்தாலும் முன்னேற்றமடைய முடியாது. மனதைப் பண்படுத்தாது குறுக்கு வழியில் சீக்கிரம் பெருநிலே அடைய வேண்டுமென்று விரும்புபவர்கள் வாழ்க்கையில் கீழ்மையுறுகின்றனர். அவரவர்கள் மனம் அடைந்திருக்கும் பரிபாகத்திற்கு ஏற்ற காட்சியைத் தான் புறத்தில் காண்கின்றனர். மனப்பிராந்தியால் உண்மை அவர்களுக்கு உள்ளபடி விளங்குவதில்லே. கீழான மனப்பான்மை படைத்த கரியன் என்பவன் பால்காட்டுக் கிராமத்தில் வாழ்ந்து வந்தான். அவன் போசலபாவாவிடம் உபதேசம் பெற விரும்பினுன். போசலபாவா அவனுடைய மனபரிபாகத்தை அறிந்துகொள்வதற்கு விரும்பினுர். "கரியனே, எங்கள் தோட்டத்தில் உள்ள தேவதைக்கு நான் பூஜை போடவேண்டும். அதற்கு நீ ரகசியமாக ஒரு காரியம் செய்ய வேண்டும். நம் கொட்டகையில் உள்ள செந்நிறப்பசுவைக் கொன்று அதன் தலேயையும், கால்களேயும் ஓரிடத்தில் புதைத்து விட்டு அதன் இறைச்சியை மட்டும் கொண்டு வா. பிறகு இந்த நிகழ்ச்சியை யாரிடத்திலும் வெளியிட்டு விடாதே" என்ருர். அவனும் சம்மதித்து அவ்வாறே செய்தான். அவ்வூர் மக்கள் ஆட்டிறைச்சி உண்பவர்களாக இருந்தார்கள். மாட்டிறைச்சி உண்பவன் புலேயன் என்றும், அவன் கீழ்க்குலத்தான் என்றும் அத்தகையவனேப் புறக்கணித்தனர். கரியன் மாட்டிறைச்சியில் விருப்பம் உள்ளவன் ஆதலால் அவனேக் கீழ்மகன் என்று எல்லாரும் புறக்கணித்தனர். "இன்றைக்குக் கறி உணவு தேவதைக்கு ஆராதிக்கப்பட்டு எல்லார்க்கும் விருந்தளிக்கப்படும்" என்று போசலபாவா அறிவித்தார். அந்த அறிவிப்பை மாமிச உணவு விருந்து என்று எண்ணிக்கொண்டு அதில் விருப்பமுள்ள மக்கள் யாவரும் கலந்து கொண்டனர். அக்கூட்டத்தில் கரியனும் கலந்துகொண்டான்.

மறுநாள் கரியன் ஒருவருடைய வீட்டுக்குள் நுழைந்த பொழுது "சண்டாளா, மாட்டு இறைச்சி உண்ணும் கீழ்க்குலத்தோனே! நீ வீட்டுக்குள் எப்படி நுழைந்தாய்? வெளியே போ" என்று அவ்வீட்டில் உள்ளவர்கள் கோபித்துக் கொண்டனர். அதற்கு அவன் பகர்ந்ததாவது: "நீங்கள் யாவரும் நீசர்கள் ஆகிவிட்டீர்கள். நேற்று நீங்கள் போசலபாவா அளித்த விருந்தை உண்டீர்கள் அல்லவா? அவ்விருந்தில் பசுவின் புலால் சமைத்து வழங்கப்பட்டது. எனவே நீங்களும் இப்பொழுது கீழ்க்குலத்தவர்கள் ஆகிவிட்டீர்கள்" என்ருன். அவர்கள் அதைக்கேட்டுப் பிரமித்து நின்றுவிட்டனர். கரியன் அத்தோடு நின்றுவிடாமல் போசலபாவாவின் ஆராதனேயில் கலந்துகொண்டு விருந்து சாப்பிட்ட அனேவருடைய வீட்டிற்கும் சென்று பசு மாமிசம் உண்டவர்கள் என்பதை அவர்களுக்கு விளம்பரப்படுத்தினுன். அவர்கள் எல்லாரும் கரியனே அழைத்துக்கொண்டு போசலபாவாவின் வீட்டிற்குச் சென்ருர்கள். அவர்கள் போசலபாவாவின் செயலேக் குறித்து வாயில் வந்தபடி அவரை வைதனர். போசலபாவா என்ன நிகழப் போகிறது என்பதைப் பார்க்கலாம் என்று மௌனமாக இருந்தார். அவர்கள் கரியனேப் பார்த்து "நாங்கள் உண்டது பசுமாமிச உணவு என்பதை எந்த அத்தாட்சியைக் கொண்டு நிரூபிப்பாய்?" என்று கேட்டனர். "எல்லாரும் வாருங்கள். நான் பசுவின் தலேயையும் கால்களேயும் புதைத்து வைத்துள்ள இடத்தை உங்களுக்குக் காட்டுகிறேன்" என்று கூறி அவர்களே அழைத்துக்கொண்டு அவ்விடத்திற்குச் சென்ருன். அந்த இடத்தைத் தோண்டிய பொழுது அந்த இடத்தில் பசுவின் தலே, கால்களுக்குப் பதிலாக ஆட்டின் தலே, கால்களே அவர்கள் கண்டனர். "அடே! நீசா! நீ வீண் ஆர்ப்பாட்டம் செய்து விட்டாய். இவையா உன் அத்தாட்சிகள்?" என்று கூறி அவனே அடிக்கச் சென்ருர்கள். "உங்களிடம் நான் சத்தியமாகச் சொல்கின்றேன். நான் பசுவைத்தான் கொன்று சமைக்கக் கொடுத்தேன். வேண்டுமென்ருல் போசலபாவாவின் மாட்டுக்கொட்டகைக்குச் சென்று பார்க்கலாம். அங்குச் செவலேப் பசு இருந்தால் என்னே என்ன வேண்டுமென்ருலும் செய்யுங்கள்" என்ருன். அங்குச் சென்று பார்த்தபொழுது கரியன் கொன்றதாகச் சொன்ன செவலேப் பசு புல் தின்று கொண்டிருந்தது. கரியன்மீது அவர்களுக்கு அடங்காக் கோபம் வந்தது. போசலபாவாவின்மீது பழி சுமத்திய கரியனேத்

தாக்க முயன்றபொழுது போசலபாவா அவர்களைத் தடுத்து நிறுத்தினர். போசலபாவாவின் பாதங்களில் விழ்ந்து "உங்களை நாங்கள் இந்தப் பாவியின் பேச்சைக்கேட்டுக் கண்டபடி வைதுவிட்டோம். எங்களை மன்னியுங்கள்" என்ருர்கள். "நீங்கள் எனக்கு ஒரு குற்றமும் செய்து விடவில்லை. இவை எல்லாம் பண்டரிநாதனின் திருவிளையாடல்களேயாகும். இவ் விளையாட்டின் மூலம் பண்டரிநாதன் உங்களுக்குப் படிப்பினை ஒன்றைப் புகட்டி இருக்கின்ருர். அதை நீங்கள் கற்றுக்கொள்ளுங்கள். தெய்வத்தின் பெயரால் பசுவைப்பலி இடுவது எவ்வளவு பாபமோ, ஆட்டைப் பலி இடுவதும் அவ்வளவு பாபமாகும். எந்த உயிரையும் ஒறுத்தல் ஒவ்வாது. உயிர்களிடத்தில் அன்புவேண்டும். உணவு உண்பதை முன்னிட்டு ஒருவன் கீழோன் அல்லது மேலோன் ஆவதில்லை. மனபரிபாகமே ஒருவனை மேலோன் ஆக்குகிறது. நீங்கள் நேற்று உண்டது பசுவின் மாமிசமும் அன்று, ஆட்டின் மாமிசமும் அன்று. பக்குவமாகச் சமைக்கப்பட்ட காய்கறிகளையே உண்டீர்கள். பரங்கி, புடலையைக்கொண்டு பசுவடித்தில் ஓர் உருவம் செய்து வைக்கப்பட்டிருந்தது. அதைத்தான் கரியன் செவலைப் பசு என்று நினைத்துக் கொன்ருன். பண்டரிநாதனின் மாயையால் அந்த வடிவம் அவனுக்குச் செவலைப் பசுவாகத் தென்பட்டது. அவன் தோண்டி எடுத்த பொழுது நீங்கள் ஆட்டினுடைய தலையையும், கால்களையும் பார்த்தீர்கள். ஆனல் அவை பரங்கி புடலை ஆகிய காய்களேயாகும். இதை நீங்கள் பாடமாக வைத்துக்கொண்டு தெய்வத்துக்குப் பலியிடும் செயலை நிறுத்திவிடுங்கள். தேங்காய், பழம், புஷ்பத்தைக் கொண்டு தெய்வத்தை ஆராதியுங்கள்" என்று கூறினர்.

அவ்வுபதேசத்தைக் கேட்ட ஊர் மக்கள் திருந்தி அமைந்தார்கள். கரியனும் அவ்வுபதேசத்தைக் கேட்டு அறியாமை நீங்கியவனானன். போசலபாவா பக்தியில் மேலும் ஆழ்ந்து ஈடுபடலானர். அவர் இருந்த ஊரில் மறுபடியும் பஞ்சம் ஏற்பட்டது. போசலபாவா தம்மிடமிருந்த தானியங்களையெல்லாம் ஏழைகளுக்குப் பகர்ந்தளித்துவிட்டார். மழை பெய்ததும் வயலில் விதைப்பதற்கு அவர் வீட்டில் தானியம் இல்லை. சிலரிடத்தில் கடன் வாங்கி வந்த நெல்லை வயலில் விதைத்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினர். வீட்டில் பல யாத்திரிகர்கள் பசியுடன் இவருக்காகக் காத்துக்கொண்டிருந்தனர். வீட்டிலோ சமைப்பதற்குப் பூச்சி பிடித்த தானியம் தான் இருந்தது. அதைச் சமைத்து அவர்களுக்கு அளிக்க அவர்மனம் ஒவ்வவில்லை. உடனே வயலுக்குச் சென்று வயலில் விதைத்திருந்த நெற்களை எல்லாம் வாரி எடுத்துக் கொண்டு வந்து உலர்த்தி அரிசியாக்கி அன்று வந்திருந்த அடியார்களுக்கு அமுது படைத்தார். அடியார்களும் அமுதுண்டு திருப்தியாகச் சென்றனர். இவர் வாரி எடுத்த நெல் போக பாக்கி வயலில் இருந்த நெல் முளைத்து அவ்வாண்டு அமோக விளைச்சலைத் தந்தது. ஊர் மக்கள் அவர் நிலத்தில் விளைந்த நெல்லைக் கண்டு வியப்படைந்தனர். நம்மிடத்திலுள்ளதை நாம் கரவாது உலகுக்கு வழங்கிவந்தால் கடவுள் நமக்குத் தேவையானதை வழங்கி விடுகின்ருர் என்ற உண்மை அவர் வாழ்க்கையில் நிருபணமாயிற்று. 'இல்லறமல்லது நல்லறமன்று' என்பது கோட்பாடு. இல்லறத்தில் வாழ்பவர்கள் தூய வாழ்வு வாழ்ந்து மற்றவர்களுக்கு உபகாரமாக இருப்பார்களானல் அவர்கள் நல்வாழ்வு வாழ்ந்தவர்களாகிருர்கள். இல்லற வாழ்வில் விருந்தோம்பல் முக்கிய இடம் பெறுகிறது. இங்ஙனம் விருந்தோம்புதலிலும், பக்தியிலும் அவர் வாழ்க்கை சிறந்த முறையில் கழிந்து வந்தது. அவர் பஜனையில் தீவிரமாக ஈடுபட்டதால் அவருடைய ஊர் பண்டரிபுரமாகக் காட்சியளித்தது.

பக்தர்கள் பரமனுக்காக வாழ்கின்றனர். பக்தர்களுடைய வாழ்க்கையில் நிகழும் சில அற்புதங்கள் பகவானுடைய லீலைகளாகும். பக்தர்கள் தங்கள் மனதை அவைகளில் கட்டுப்படுத்திக்கொள்வதில்லை. பக்தர்கள் யாண்டும் பகவான் திருவடிகளில் மனதைச் செலுத்தி இவ்வுலக பந்தத்திலிருந்து விலகியிருக்கின்றனர். போசலபாவாவின் வாழ்க்கை உண்மையான பக்தனுடைய வாழ்வுக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. தன்னலமற்ற வாழ்வும், பக்தியும் போசலபாவாவின் வாழ்க்கை லட்சியங்கள். போசலபாவாவின் வாழ்க்கை நமக்குப் பக்தியைப் புகட்டுவதாகுக. (முற்றும்)

சமயங்களின் உட்பிரிவுகள்

(சகோதரி நிவேதிதையின் ஆங்கிலக்கட்டுரையை யதீஸ்வரீ கிருஷ்ணப்ரியா தமிழில் மொழிபெயர்த்தது.)

பிரிவுகள் என்றாலே ஒற்றுமையைக் குலைக்கும் அமைப்புகள் என்ற கருத்துப் பொதுவாக நிலவி வருகிறது. ஆழ்ந்து சிந்திக்காமல் "இது இப்படித்தான் இருக்கும்" என்ற மேற்போக்கான மனப்பான்மையில் தெரிவிக்கப்படும் கருத்து இது. மதம், மொழி, இனம் போன்ற காரணங்களால் ஏற்படும் பிரிவுகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்று ஆராய்வோம்.

கொள்கைகளில் உள்ள சிறு சிறு வித்தியாசங்களைப் பெரிதுபடுத்திக் கடுகை மலையாக்குவது, விதண்டாவாதத்தை விரும்பி வரவேற்பது, அற்பமான காரணங்களை முன்னிட்டுச் சங்கங்களைத் துண்டாடுவது—இது போன்ற மனப்பான்மை கேட்டினை விளைவிக்கும். இது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. ஒருமைப்பாட்டைக் குலைக்கின்ற இத்தகைய பிரிவினை மனப்பான்மைதான் பிரிவுகளின் தன்மை என்றால் அப்படிப்பட்ட பிரிவுகள் இல்லாது மறைவதே சமுதாயத்திற்கு நல்லது. அத்தகைய பிரிவுகளை உருவாக்குவதற்கு எவருக்கும் அனுமதி இல்லை. ஆனால் சிந்தித்துப் பாருங்கள், எல்லாப் பிரிவுகளும், எல்லாக் காலத்தும் பேதத்தை உண்டு பண்ணுபவையாகத் தான் இருக்கவேண்டுமா? பிரிவுகளிலும் நலன் ஏதும் இருக்க முடியாதா?

பிரிவுகள் எவ்வாறு ஏற்படுகின்றன? மற்றவர்களிடமிருந்து தம்மைப் பிரித்து வைப்பதற்காகவன்று—ஒத்த லட்சியத்தை, பொது உண்மையைக் கடைப்பிடிப்பவர்களோடு தம்மைப் பிணைத்துக் கொள்வதற்காகவே மக்கள் பிரிவுகளை ஏற்படுத்துகிறார்கள். பொது லட்சியம் என்ற கொடியின் கீழ் மக்களை ஒன்று படுத்துகின்ற பிரிவுகளைத் திருச்சபைகள் (churches) என்று அழைக்கலாம். 'திருச்சபை' என்ற பதத்தின் உண்மையான பொருள், ஆதி காலத்தில் வழங்கி வந்த பொருள், "ஒன்றினைந்து விசுவாசம் உள்ளவர்களின் சங்கம்" என்பது தான். உயர்ந்த லட்சியம் எதனிடத்தும் கொள்ளும் விசுவாசத்தினால் இணைபவர்களின் எந்தக் கூட்டமும் திருச்சபையே. கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபடுவோரின் சங்கங்களும், பண்டிதர்களின் குழுக்களும் திருச்சபை என்ற மதிப்பைப் பெறத்தக்கவை. உதாரணமாக மருத்துவர் கழகங்கள், ஆசியாவின் வரலாற்றை ஆய்ந்தறியும் ஆசிய சங்கங்கள் (Asiatic Societies) போன்றனவும் திருச்சபைகளே. இத்தகைய குழுக்களின் அங்கத்தினர்கள் ஒரு பொது லட்சியத்தில் வைக்கும் நம்பிக்கையின் பேரில் தான் ஒருங்கிணைந்திருக்கிறார்கள். பிரிவுகளுக்கு இப்படியொரு விளக்கம் கொடுத்த உடனே ஓர் உண்மை தெளிவாகும். பிரிவுகள் உண்மையில் ஐக்கியத்தையே உறுதிப்படுத்துகின்றன—வேற்றுமையை அன்று. அவை மக்களை இணைத்துவைக்கின்றன—பிரித்து வைப்பதில்லை. சகோதரத்துவத்தைத்தான் அவை வளர்க்கின்றன—சண்டைசச்சரவுகளை அல்ல.

'திருச்சபை' என்பது சகோதரத்துவத்தை வளர்க்கும் சபையாக இருக்கிறது; ஏன், ஒரு விதத்தில் தாய்வீடாக இருக்கிறது என்று கூடச்சொல்லலாம். எவ்வாறெனில் அங்கத்தினன் ஒருவன் வறுமையால் வாடும் போது உடனிருப்பவர்கள் "நம் சங்கத்தைச் சேர்ந்தவன் வருந்துகின்றானே" என்று அவனுக்கு உதவ வருகிறார்கள்; சங்கத்தின் நலத்தில் அவர்களுடைய சொந்த நலனும் அடங்கியிருக்கின்றது என்று உணர்கிறார்கள்; வெளியுலகின் கொடுமைகளிலிருந்தும், ஏளனத்திலிருந்தும் அவனைப் பாதுகாக்கிறார்கள். இந்த ஒருமைப்பாட்டு உணர்ச்சியை யூதர், சமணர், பாரசீகர்கள் போன்ற இனத்தாரிடம் காணலாம்.

பிரிவுகள் கல்விச் சாலைகளாகவும் அமையும். ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களுக்கென்று ஒரு குறிப்பிட்ட லட்சியம் அல்லது மேலாம் கருத்து பரம்பரையாக வழங்கப்பட்டு வரும். இந்த லட்சியத்தில் இளைய தலைமுறையினருக்குப் பயிற்சி கொடுப்பது பிரிவுகளின் பணியாகிறது. இத்தகைய பயிற்சி பெற்ற இளைஞர்களுக்குப் படை வீரர்களைப் போலச்சங்கத்தில் ஒரு குறிப்பிட்ட இடமும், பொறுப்பும் உண்டு. சங்கத்திற்குரிய லட்சியமும், கட்டுப்பாடும், ஒற்றுமையும் அதைச் சேர்ந்த ஒவ்வொரு இளைஞனுக்

கும் சிறுவனுக்கும் அவன் பிறந்த நாள் முதல் பிதுரார்ஜிதமாகக் கிடைக்கின்றன.

சங்கம் என்பது ஒருவனுடைய திறமையைச் சோதிக்கும் அரங்கமும் ஆகிறது. ஒவ்வொரு அங்கத்தினனின் வாழ்வும் மற்ற எல்லா அங்கத்தினர்களின் பார்வைக்கும் இலக்காகிறது. அவர்கள் அளிக்கும் ஆதரவும் உற்சாகமும் அவனுக்கு வழிகாட்டியாகவும் ஊன்றுகோலாகவும் இருக்கின்றன. சங்கத்தின் ஒவ்வொரு மைந்தனும் அதன் பெருமையை நிலைநாட்டக் கடமைப்பட்டிருக்கிறான்; அதன் பொருட்டு அவன் தன் முழுத் திறமையையும் வெளிப்படுத்தி ஆகவேண்டும். தாய்ச்சபை தன் வீர மைந்தன் ஒவ்வொருவனையும் ஆசீர்வதித்து வழியனுப்புகிறாள். வெற்றிவாகை சூடிவரும் போது பெருமையோடு வரவேற்கிறாள். அவனுடைய வாழ்வின் பெருமை மிக்க செயல்களையும் சம்பவங்களையும் மதிப்புக்குரியவைகளாகப் பாதுகாக்கிறாள்; அவன் நிழலில் வாழும் மற்றவர்க்கும் அப்பெருமையின் சிறப்பு கிடைக்கும்படி செய்கிறாள். திரவியத்தையும் தீரச் செயல்களையும் நாடித் தூரதேசங்களுக்குச் செல்லும் இளம் மைந்தருக்கு அங்குத் தங்குவதற்கு இடத்தையும், நண்பர்களின் அன்பையும் அளிக்கிறாள். ஒரே சமயத்தில் தாயாகவும், நண்பனாகவும், காவலனாகவும், தளபதியாகவும், குருவாகவும் இருக்கிறது ஒரு நல்ல பிரிவு. இப்போது நினைத்துப் பாருங்கள்—பிரிவுகள் முற்றிலும் தீமை பயப்பவைதாமா?

பிரிவுகளின் முடிவான பயன் பிரிவுகளுக்கு அப்பால் செல்வதுதான். வேற்றுப் பிரிவுகள் எவையும் உண்மையை அறிந்திருக்கமுடியாது; உண்மை தனக்கு மட்டுமே பாத்தியமானது என்று சொல்வது ஒரு பிரிவு செய்யக் கூடிய மிகக் கொடிய பாபமாகும். விவேகிகள் அத்தகைய மனப்பான்மையைத் தவிர்ப்பார்கள். ஒருவன் தான் சார்ந்திருக்கும் சங்கத்திற்கு மதிப்பைத் தேடித்தரும்வகையில் தன் பங்கைச் செவ்வனே செய்து முடிக்கலாம். ஆனால் முடிவாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவது எத்தகைய மனப்பான்மையில் தன் பங்கை நிறைவேற்றியிருக்கிறான் என்பதுதான். தாம் மட்டுமே அப்பழுக்கில்லாதவர்கள், தவறு இழைக்காதவர்கள் என்று சொல்வது பொருந்தாது. புத்தர் பெம்மான் சொன்னது போல "ஞான ஒளி இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனின் பாதையிலும் ஒளிர்கிறது.''

இவ்விரு மனப்பான்மைகளில் எது சிறந்தது என்பதை இந்தியர்கள் அறிவார்கள். உலகனைத்தையும் அன்பினால் ஒன்றாக்கிய புத்த பகவானின் இந்த அருள்மொழி வெளிப்போந்தது இந்தியாவிலிருந்துதான். எந்த ஒரு தனிச் சபையும் உண்மையைத் தனக்கு மட்டும் உரியதாக்க முடியாது. எந்த ஒரு ரட்சகனும், தான் மட்டுமே குறைகளுக்கு அப்பாற்பட்டவன் என்று சொல்லமுடியாது. எல்லாப் பிரிவுகளும் கூடுவது மனித இனம் என்னும் ஒரு பெரிய ஆலயத்தில்தான்.

அறிவியல் முன்னேற்றத்தினால் பரந்த இத் தொல்லுலகமும் சிறியதாகிவிட்ட இந்நாளில் சிறு பிரிவுகளை ஏற்படுத்தும் காலம் சென்றுவிட்டது. ஆனால் பிரிவுகளின் நல்ல அம்சங்களிலிருந்து உணர்ச்சியும் உத்வேகமும் பெற்று நம் வாழ்வை உயர்த்திக்கொள்வதற்கு எந்தத் தடையும் இல்லை. இது காறும் சமயத்திருச் சபைகளும் மற்ற சங்கங்களும் மக்களை ஒன்றுபடுத்துவதில் என்ன பணி செய்தனவோ அந்தப் பணியை இன்று ஒவ்வொரு கிராமமும், நகரமும், நாடும் செய்யவேண்டும். இவையே பாரதத்தாயின் திருக்கோயில்கள்; இவையே நம்முடைய நவீன யாகசாலைகள். பள்ளியாகவும், இல்லமாகவும், ஒத்த கருத்துடையோர் கூடும் நிலையமாகவும் நம் கிராமங்கள் வடிவெடுக்கட்டும். நம் தாய்த் திரு நாடு வேறுபட்ட பல அம்சங்களை இணைக்கும் வலிமை மிக்க சக்தியாக விளங்கட்டும்.

சமயங்கள் கொள்கைகளின் பெயரால் இணைகின்றன. நாம் தேசத்தின் பெயரால் ஒன்றுபடுவோம். புண்ணிய நாடான நம் மாதரு பூமியின் புனிதம் நம்மை ஆகர்ஷிக்கிறது. நம் முன்னோர்களான ரிஷிகள் புனித மிக்க இடங்களில்தான் யாகசாலைகளையும், ஹோமகுண்டங்களையும் அமைத்தார்கள். இந்த அன்பின் ஒளியில் பிறந்து வளர்ந்த நாம் பாரதத்தாயின் குழந்தைகள் என்ற முறையில் நெருங்கிய பந்தத்தினால் இணைக்கப்பட்டவர்கள் அல்லவா? அன்னையின் திருத்தொண்டில் நாம் இந்தப் பேருண்மையை மறவாதிருப்போமாக.

ஸ்ரீ யோக வாசிஷ்டம்

(திரு V. S. நரசிம்மன்)

யோக வாசிஷ்டம் (ஞான வாசிஷ்டம்) என்ற வேதாந்த நூலைப்பற்றி ஆத்ம சாதகர்கள் அனைவரும் கேள்விப்பட்டிருக்கின்றனர். 32,000 பாடல்களைக் கொண்ட இந்தக் கிரந்தத்தை வால்மீகி மகரிஷி எழுதினர் என்று கருதப்படுகின்றது. தத்துவத்தை விளக்குகின்ற இந்த நூல் புராண அமைப்புகள் போல, பல கதைகள், கிளைக் கதைகள், ஒன்றிற்கு ஒன்று தொடர்பு கொண்டு சங்கிலித் தொடர்போல் பிணைந்துள்ள சம்பவங்களைத் தன்னகத்தே அடக்கியுள்ளது. காஷ்மீரத்தைச் சேர்ந்த அபிநந்தனர் யோக வாசிஷ்டத்தைச் சுருக்கி 6000 சுலோகங்களில் 'லகுயோக வாசிஷ்டம்' என்று வெளியிட்டார். 'வாசிஷ்ட சந்திரிகா' என்ற விளக்க உரையுடன் இப்புத்தகம் பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ ஞானனந்த பாரதி சுவாமிகள் 'ஸ்ரீ வாசிஷ்ட சங்கிரஹம்' என்று 1700 சுலோகங்களில் இதன் தத்துவத்தை விளக்கியுள்ளார். 'ஸ்ரீ வாசிஷ்ட ஸாரம்' என்ற தலைப்பில் அதன் தமிழ் வடிவமும் வெளியாகியுள்ளது. 'ஸம்வித்' என்பவரால் அண்மையில் இப்புத்தகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பும் வெளியிடப்பட்டுள்ளது. The Essence of Yoga Vasistha என்பது புத்தகத்தின் தலைப்பு. (Publishers: Samata Books, Madras). தமிழ் மக்களிடையே வீரை ஆள வந்தார் என்னும் முனிவரால் இயற்றப்பட்ட 'ஞான வாசிட்டம்' என்ற காவியம் சிறப்பாகப் பயிலப்படுகின்றது. இரண்டு பகுதிகளாகப் பதிக்கப்பட்டுள்ள இக்காவியத்தில் 2055 பாக்கள் காணப்படுகின்றன.

தர்சனங்களை விளக்கும் கிரந்தங்களில் வாத, விவாத முறையில் கலைச் சொற்களைக் (பரிபாஷை) கொண்டு வேதாந்த தத்துவங்கள் நிலைநாட்டப் பெறுகின்றன. யோகவாசிஷ்டத்தில் இத்தகைய தர்க்கமுறை இடம் பெறுவதில்லை. அனுபவத்தையும், விசாரத்தையும் ஆதாரமாகக் கொண்டு நேரடியாகக் கருத்துக்களை எடுத்துரைப்பது இதன் சிறப்பு. ஆத்ம சாதனை, விவேகம், உலகியல் வாழ்வைப் பொருட்படுத்தாத வைராக்கியம், ஞானயோக ஆராய்ச்சி ஆகியவை இந்நூலின் முக்கிய அம்சங்களாக இலங்குகின்றன.

வைராக்கியம், முமுக்ஷு, உற்பத்தி, ஸ்திதி (நிலைத்து இருப்பது) உபசாந்தி (மன அமைதி) நிர்வாணம் (முக்தி)— என்று ஆறு அத்தியாயங்களாக (பிரகரணங்கள்) இந்நூல் பிரிக்கப்பட்டுள்ளது. மனதைக் கவரும் கதைகளும், அதே சமயம் உயர்ந்த ஆன்மீக தத்துவமும் இரண்டறக்கலந்துள்ள இந்நூலைச்சாதகர்களாகிய நாம் ஆராய்வது மிக்க பயனைத் தரும். மேலாம் சாஸ்திர நூல்களை ஆராய்வது நமது கடமையாகும். ரிஷிகளுக்கு நாம் பட்ட கடனை அதனால் தீர்க்கின்றோம். (தேவ, ரிஷி, பித்ரு ருணம் என்று மூன்று கடன்கள்/கடமைகள் நமக்கு விதிக்கப்பட்டுள்ளன). இதுவே 'ரிஷி யக்ஞம்' என்றும் கொள்ளலாம்.

இறை வணக்கத்துடன் கிரந்தம் துவங்குகின்றது.

यतः सर्वाणि भूतानि प्रतिभान्ति चस्थितानि ।
यत्रैवो पशमं यान्ति तस्मै सत्यात्मने नमः ॥

यतः (யத:) எதனிடமிருந்து सर्वाणि भूतानि (ஸர்வாணி பூதானி) எல்லா உயிரினங்களும், प्रतिभान्ति (ப்ரதிபாந்தி) ஒளியுடன் திகழ்கின்றனவோ, स्थितानि च (ஸ்திதானிச) நிலைபெற்று உள்ளனவோ, यत्रैव (யத்ர ஏவ) எதில் उपशमं यान्ति (உபசமம் யாந்தி) அடங்கி அமைதியுறுகின்றனவோ, तस्मै (தஸ்மை) அந்த सत्यात्मने (சத்திய ஆத்மனே) மெய்ப்பொருளுக்கு नमः (நம:) வணக்கம்.

சராசரமாகிய அனைத்து உயிர்களிலும் உள்ள பொருளை வணங்கி ஆசிரியர் நூலைத் துவக்குகின்றார். ஆதாரமாக "உலகம் யாவையும் தாமுள வாக்கலும், நிலைபெறுத்தலும், நீக்கலும்" என்ற வர்ணனையும், "யதோ வா இமானி பூதானி ஜாயந்தே, யேன ஜாதாநி ஜீவந்தி, யம் பிரயந்தி அபி சம் விசந்தீதி, தத் விஜிஞ்ஞாசஸ்வ, தத் ப்ரஹ்மேதி" என்ற உபநிஷத் மொழியும் ஈண்டு ஒப்பிடத் தக்கன.

"எங்கும் நிறைந்து, பூமி, ஆகாயம், இடைவெளி அனைத்தையும் பிரகாசிக்கச் செய்து,

எனது அகத்தேயும் புறத்தேயும் திகழ்ந்து, அனைத்துமாய் இலங்கும் ஜோதியை வழுத்து கின்றேன்."

அடுத்த பாடலில் அதிகாரி லக்ஷணம் கூறப் படுகின்றது. ஆன்மீக வாழ்வில் அனைவருக்கும் நாட்டம் வருவதில்லை என்பது வெளிப்படை யான உண்மை. சாதகர்களிலும் பலதரப்பட் டோர் உண்டு. அவரவர் நிலைக்கு ஏற்ப சாதனை யும், சாஸ்திரமும் அமையும். இந்தக் கிரந்தத் திற்கு அதிகாரி யார்?

अहं बन्दोः विमुक्तः स्यमिति यस्यास्ति निश्चयः ।
नात्यन्तमज्ञो नो तज्ज्ञः सोऽस्मिन् शास्त्रेऽधिकारवान् ॥

अहं (அஹம்) நான் बन्दः (பந்த:) பந்தத்தில் (தளையில்) உள்ளேன், विमुक्तः (விமுக்த:) தளை யில் இருந்து விடுபட்டவன், स्याम् (ஸ்யாம்) ஆவேன், इति (இதி) என்று, निश्चयः (நிச்சய:) உறுதி, यस्य अस्ति (யஸ்ய அஸ்தி) எவனிடத் தில் உள்ளதோ, न अत्यन्तं अज्ञः (ந அத்யந்தம் அஞ:) முற்றிலும் ஞானமற்றவனாக இல்லையோ, न तत् ज्ञः (நதத் ஞ:) அப்பரம் பொருளை அறிந் தவராகவும் எவன் இல்லையோ, सः (ஸ:) அவன் अस्मिन् (அஸ்மின்) இந்த शास्त्रे (சாஸ் திரே) சாஸ்திரத்தில் अधिकारवान् (அதிகார வான்) தகுதி உள்ளவன் ஆகிறான்."

ஒரு குறிப்பிட்ட நெறியைப் பின்பற்றத் தகுதிகள் சில வரையறுக்கப்பட்டிருக்கின்றன. உலக இயலில் எந்த அளவு இவை இன்றி யமையாதனவோ, அதே முறையில் ஆன்மீக வாழ்விலும் 'அதிகாரி பேதம்' இன்றியமையா தது. மானிடர் அனைவரையும் ஒரே தட்டில் எடைபோட இயலாது. அது சரியான மதிப் பீடும் ஆகாது. சாதகர்களை 'அதிகாரி' என்று வரையறுப்பது ஹிந்து தர்மத்தின் தனிப்பட்ட சிறப்பு ஆகும். பகவத் கீதைக்கு அர்ஜுனனே அதிகாரி; பீமனோ, தர்மனோ அல்லர். மேலான ஆத்ம வித்தைக்குச் சரியான அதிகாரிதானா என்று பரீக்ஷை செய்த பின்னரே யமதர்மன் நசிகேதனுக்கு உரைக்கின்றார். யோக வாசிஷ் டத்தைப் படிக்கவிரும்பும் அதிகாரிக்கு முதல் இலட்சணமாக ஆன்மீக நாட்டம் (முமுக்ஷுத் வம்) கூறப்படுகின்றது. சாதாரண உலக வாழ்வு என்னும் அஞ்ஞானத்தில், பந்தத்தில் தான் இருப்பதை அவன் உணர்கின்றான். இதில் இருந்து விடுபட வேண்டும் என்ற தீவிர வேகம் அவனிடம் உள்ளது. அடுத்து அவன் ஆன்மீக நெறியை முற்றிலும் உணராத மூட னாகவோ, அனைத்தும் அறிந்த ஞானியாகவோ இருக்கக்கூடாது. இரண்டு நபர்களுக்குமே நூல் அறிவு பயனற்றது! "பந்த முற்றனன் பரபதத்தைச் சேர்கவென்று—அந்த நிச்சயம் உளான், அறிவிலான் அலான்—சிந்தனைத் துயர் கெடச் சித்தைச் சேர்ந்துளான்—அவன் இந்த நூற்குஉரியவன் என்றுகொள்கவே." (ஞான வாசிட்டம், 21)

பாரத்வாஜரின் கேள்வி:

ஞானத்தைப் பெறுவதற்குக் குருவை நாடி, அவரடிபணிந்து, தனது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்த வேண்டும் என்பது நமது மரபு. அதற்கிசைந்தாற்போல் குரு-சீடன் உரையா டல் மூலம் நூலினை இயற்றி உள்ளார். பாரத் வாஜர் எல்லாம் அறிந்த ஞானியாகிய வால் மீகி முனிவரைத் தனிமையில் சந்தித்து அடங் கிய குரலில் "ஐயா சம்சாரம் என்னும் துன் பக் கடலில் ஸ்ரீ ராமன் எவ்வாறு இருந்தார்? கருணை கூர்ந்து எனக்கு உபதேசம் செய்வீர்" என்று பணிவோடு வேண்டினார். வால்மீகி முனிவரும் "பாரத்வாஜனே, நீ நல்ல கேள்வி யைக் கேட்கின்றாய். அதற்கு விடையை அறி யும் பக்குவமும் உனக்கு உள்ளது" என்று உபதேசத்தைத் துவங்குகின்றார்.

'வாஸனைத் தியாகமே' முக்தியாகும் என்ற கருத்து துவக்கத்தில் வலியுறுத்தப்படுகின்றது.

वासनानां य अशेषेण उत्तमः परित्याग मोक्ष इत्युच्यते सद्भिः ।

பழைய வினையின் மூலம் மனதில் பதிந்துள்ள பாதிப்புகளே வாஸனை எனப்படும். மரணத் திற்குப் பின்பும் இவை ஜீவனைப் பாதிக்கின் றன; அடுத்து வரும் பிறவிகளின் தன்மையை நிர்ணயிக்கும் வல்லமையை அவை பெற்றுள் ளன. இத்தகைய வாஸனை, 'சுத்தமானது, மலினமானது' என்று இரு வகைப்படும். சுத்த வாஸனை பிறவியை ஒழிப்பது; மலின வாஸனை பிறவிக்கு உட்படுத்துவது. அறிய வேண்டிய பொருளை அறிந்த ஞானிகள் சுத்த வாஸனை உடையவர்கள். அவர்கள் பிறவித் தளையில் விழாது, ஜீவன்முக்தர்களாகத் திகழ்கின்றனர். அத்தகைய முக்திநிலையை ஸ்ரீராமன் எப்படி அடைந்தான்என்று உனக்குச் சொல்கின்றேன்.

கவிதைகள் புகட்டும் தத்துவங்கள்

(பத்தாம் வகுப்பு ஆங்கிலப் பாடப்பகுதியில் உள்ள கவிதைகளின் கருத்து விளக்கம்)

[256 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரோஜாவும் தோட்டக்காரனும்

இயற்கை அழகு உள்ளத்தைக் கவரவல்லது. இயற்கை நிகழ்ச்சிகள் நமக்கு அரியபெரிய பாடங்களைப் புகட்டுகின்றன. வாழ்க்கைத் தத்துவத்தை இயற்கை விளக்கிக்கொண்டிருப் பதைக் கவிஞர் காண்கின்றார். இயற்கை நிகழ்ச்சி ஒன்றைக் கண்டதும் கவிஞர் உள் ளத்தில் எழுந்த கருத்தை இக்கவிதையில் அழகுற அமைத்துக்காட்டுகிறார்.

ஓர் அழகான தோட்டம். இளம் ரோஜாப் புஷ்பம் மலர்ந்து தன் அழகை வெளிப்படுத்து கின்றது. அத்தோட்டத்தில் வயதான தோட் டக்காரன் இருக்கின்றான். அவன் மலர்ந்த ரோஜாச் செடிக்குப் பக்கத்தில் நின்றுகொண் டிருக்கின்றான். மலர்ந்த ரோஜா அவனைப் பார்த்துச் சிரிக்கிறது. ரோஜாப் புஷ்பம் தன் அழகையும் இளமையையும் குறித்துக் கர்வம் கொள்கிறது. தோட்டக்காரன் முதுமை அடைந்திருந்ததால் அவன் விரைவில் மரண மடைவான் என்று எண்ணி நகைக்கிறது. இக் காட்சியைக் கவிஞர் அழகுற இக்கவிதையில் சித்தரித்துள்ளார்.

அது இளவேனிற்காலமாதலால் ரோஜாப் புஷ்பம் முழுமையாக மலர்வதற்கு இயற்கைச் சூழ்நிலைபொருத்தமாக இருந்தது.நன்கு மலர்ந்த ரோஜாவுக்கு வயதான தோட்டக்காரனைப் பார்க்கும்போதெல்லாம் சிரிப்பாக இருந்தது.

மறுநாள் காலைநேரத்தில் தென்றல் வீசி யது. அத்தென்றல் ரோஜா இதழ்களை யெல் லாம் சிதறடித்து நிலமெங்கும் பரப்பியது. தோட்டக்காரன் அவ்விதழ்களைக் கூட்டிக் குவித்தான். ஒரே நாளில் ரோஜாவின் கொட் டம் அடங்கியது. தன் இளமையையும் அழ கையும் குறித்துக் கர்வம்கொண்டிருந்த ரோஜா தரையில் காலால் மிதிபட்டு அழிந்தது. வய தான தோட்டக்காரன் அழகான ரோஜாப் புஷ்பம் அழிந்துபோனதைக் கண்டு அதன் இதழ்களைக் குவியலாகக் குவித்துக்கொண் டிருந்தான். இக்காட்சியைக் கவிஞர் பார்த் ததும் கவிஞருடைய உள்ளத்தில் தானாகவே எழுந்த கருத்துக்களை இக் கவிதை வடிவத்தில் எழுதுகிறார்.

இக்கவிதையில் கவிஞர் உண்மை ஒன்றை நமக்கு விளக்குகின்றார். இளமையும் அழகும் நிலையற்றவை. உடலுக்கு முதுமை வரும். ஆனால் நம்மிடமுள்ள ஆத்மா சத் சொரூபம். அது யாண்டும் அழியாதது. அழியாத ஆத்ம சொரூபம் அழிகின்ற பொருள்களுக்கெல்லாம் சாட்சிமயமாய் இருக்கிறது. ஆத்மா அழி வில்லாதது என்பதைக் காலம் (Time) என்ற சொல்லால் கவிஞர் குறிப்பிடுகின்றார். அழி வுக்கு ரோஜாவும், அழியாமைக்குத் தோட்டக் காரனும் உதாரணங்கள்.

அழகையும், இளமையையும் குறித்துக் கர்வம் கொண்டு காலத்தை வீணாக்குபவன் ரோஜாப் புஷ்பம் போன்று அழிந்து போகி றான். அவன் வாழ்க்கையில் அடையவேண்டிய நித்தியத்துவத்தை அடைவதில்லை. அழியும் பொருளிடத்துக் கருத்துச் செலுத்துபவன் அழியாத ஆத்மாவை மறந்து வாழ்க்கையை வீணாக்குகின்றான். இளமையும், அழகும் நிலை யாதவை. ஆத்மாதான் நிலையான பொருள் என்னும் பாடத்தை இயற்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டும் என்பதைக் கவிஞர் இப்பாடலின் மூலம் நமக்குப் புகட்டுகின்றார்.

பத்தாம் வகுப்புப் பாடப்பகுதியிலுள்ள கவி தைகளை எல்லாம் தத்துவ விளக்கத்தோடு ஆராய்ந்து முடித்தோம். தேர்வுக்காக அக் கவிதைகளைப் படிக்கின்ற மாணக்கன் தேர்வு முடிந்ததும் அவற்றை அடியோடு மறந்துவிடு கின்றான். அவன் வாழ்க்கையில் அவற்றின் மூலம் அடையவேண்டிய பயனை அடைவ தில்லை. ஏட்டுக்கல்வி தேர்வுக் கல்வியாக மட் டும் அமையாது இதயத்தை மலரச் செய்யும் கல்வியாக அமையவேண்டும். மாணக்கன் ஒருவன் நன்றாகச் சிந்தித்துத் தர்மசக்கரத்தில் ஆராய்ந்த கருத்துக்களை எல்லாம் தன் வாழ்க்கை மயம் ஆக்குவானானால் அவன் தேர் வில் வெற்றி பெறுவதோடு வாழ்க்கையிலும் வெற்றி பெறுவான்.

சக்தியை வணங்கிச் சக்தி பெறுவோம்

(சுவாமி துருவானந்தர்)

பாரததேசம் புண்ணிய பூமி, கர்ம பூமி, யோக பூமி என்றெல்லாம் அழைக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் உள்ள கோயில்கள், விழாக்கள், சமய நூல்கள், முனிவர்கள், ரிஷிகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், சித்தர்கள் போன்ற சிறப்பு அம்சங்களை வெளி நாட்டில் நாம் காண முடியாது. உலக நாடுகளில் எங்கேனும், எப்பகுதியிலேனும், யாரிடமாவது மரணத்தைப் பற்றிய மர்மமோ, வாழ்க்கையைப் பற்றிய தத்துவமோ தெரிந்திருக்கிறது என்றால் அது இந்தியாவிலிருந்துதான் போயிருக்க முடியும். எவ்வளவோ பொன்னும் பொருளும் போகமும் இருப்பதற்கிடையில் சற்றும் மன அமைதியில்லாது உழலும் மேல் நாட்டார் நம் பாரத நாட்டை வந்து பார்த்துச் செல்வதால் மனத்திலுள்ள வேகம் குறைந்து சாந்தி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் யாத்திரையாக வருவது தொன்று தொட்டு இன்று வரை நடந்து வருகிறது. அருளுக்கும் அருளாளர்களுக்கும் பெயர் போன நம் நாட்டில் அறியாமையும், மூடநம்பிக்கையும், வறுமையும், சமயச் சண்டைகளும் புகுந்து நம்மைப் பல ஆண்டுகளாக இருளில் தள்ளி ஏற்றமுறச் செய்யாது தடுக்கின்றனவே! அதன் காரணம் என்ன? என்ற கேள்வி எழலாம்.

உடலில் சக்தி குறைந்து விட்டால் அது நோயால் பிடிக்கப்பட ஏதுவாகிறது. மருத்துவர் தகுந்த முறையைக் கையாண்டு நோயைப் போக்குகிறார். அதே விதத்தில் நம் நாடு இடைக்காலத்தில் தன் பொலிவை இழந்து வலிவு குன்றிய நேரத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சர் அவதரித்தார். சக்தி இழந்த சமூகம் சக்தி பெறவேண்டி சக்தி உபாசனையில் தீவிரமாக ஈடுபட்டார். அவருக்கு முதல் குருவாக வந்து வாய்த்தவர் பைரவிபிராமணி என்ற அம்மையார். அதே போன்று முதல் சிஷ்யையாக வாய்த்தவர் சாரதா தேவியார். இருவரும் சக்தியின் சொரூபங்கள். பிறவிக் குருடன் ஒருவனைச் சூரிய ஒளியில் விட்டாலும் வெளிச்சத்தை அவன் தெரியாதிருப்பது போன்று அடிமைகளாகப் பல ஆண்டுகளாக வாழ்ந்த நம் நாட்டு மக்கள் சிந்திக்கும் சக்தி இழந்து செயலாற்றும் சக்தி இழந்து நடமாடும் ஜடம் போன்றல்லவா வாழ்ந்து வந்தனர். மனிதனிடம் மறைந்துள்ள தெய்வீக சக்தியை அளப்பரிய ஆற்றலை ஞாபகப்படுத்தவே ஸ்ரீ ராமகிருஷ்ணர் விவேகானந்தர் தோன்றினர்.

மரணமில்லாப் பெருநிலையை மக்களுக்குப் பிரகடனப்படுத்தி மகிழ்ச்சியாகவும், செழிப்பாகவும் வாழ வழிகாட்டிய நம் நாட்டிலா வறுமை தாண்டவமாடவேண்டும் என்ற ஐயம் எழலாம். இதற்கு விடை காணுவது மிகவும் சுலபம். வெளிச்சம் உள்ள இடத்தில் இருள் இருக்காது. அதேபோன்று தத்துவத்தை முறையாக கடைப்பிடிக்கின்ற நாட்டில், உழைப்பைத் தெய்வமாக மதிக்கின்ற நாட்டில் வறுமை தலைகாட்டாது. சரித்திரமே இதற்குச் சான்றாகிறது. இரண்டாவது உலக மகாயுத்தம் வந்தவுடன் ஜப்பானுக்கு ஏற்பட்டது பெரும் நஷ்டம். அமெரிக்கா போட்ட அணுகுண்டால் அழிய வேண்டிய நாடு எப்படியோ தாக்குப் பிடித்துத் தங்கள் சக்தியை உணர்ந்து முயன்று உழைத்து முப்பதாண்டுகளில் உலக வல்லரசுகளில் ஒரு நாடாகத் திகழ்கிறது. சுதந்திரம் பெற்ற முப்பது ஆண்டுகளுக்குப் பிறகும் கூட நாம் நம் தேவைகளுக்குரிய வைகளை இறக்குமதி செய்துகொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறோம். வறுமைகோட்டின் கீழ் வாடிவதங்கும் மக்களின் எண்ணிக்கை அதிகம். விடா முயற்சியும், தளரா உழைப்பும், தன் நாட்டை எங்ஙனமேனும் சிறக்கச் செய்யவேண்டும் என்ற தாகமுமே ஜப்பானியரை முன்னேறச் செய்தன. தனி மனிதனயிருந்தாலும், சமுதாயமாயிருந்தாலும் தங்களிடமுள்ள ஆற்றலை உணர்ந்து அதன்படி உழைக்க வல்லவர்கள் இருக்குமிடங்களில் வறுமை தலைகாட்டாது. தங்கள் சக்தியை உணர்ந்தார்கள் ஜப்பானியர்கள். ஆனல் நாமோ உயர்ந்த தத்துவத்தை உலகுக்கு அளித்தோம். ஆனல் அதைக் கடைப்பிடிக்கவில்லை. எண்ணிக்கையில் அதிக அளவில்

இருந்தும் இயற்கைவளங்கள் சிறக்கயிருந்தும், நாட்டை முன்னேறச் செய்யவேண்டும் என்ற நாட்டமின்மையால் முயற்சி குன்றி, உழைப்பை உதறி சோம்பியுள்ளதால் இன்னும் பின்னணியில் இருக்கிறோம். நம் குறையை உணர்ந்து அதை நீக்க முயன்று நம்மிடம் மறைந்துள்ள மாபெரும் ஆற்றலில் நம்பிக்கை வைத்துக் கடுமையாக உழைத்தால் உலக அரங்கில் உன்னத நிலையில் இருப்பதுமட்டுமன்று தனி மனிதனின் அன்றாட வாழ்க்கைப் பிரச்னைக்கும் முற்றுப்புள்ளி வைத்தவராவோம்.

ஏதோ ஒரு வழியில் அம்பாளை உபாசனை பண்ணிய பிறகே சான்றோர்கள் தங்களுடைய சத்கைங்கரியத்தை ஆரம்பித்தனர். ஸ்ரீ ராமன் கடலைக்கடக்குமுன் ஒன்பதுநாட்கள் உபவாசம் இருந்து அம்பாளைப் பிரார்த்தனை பண்ணினார். பத்தாவது நாள் அம்பாள் தரிசனம் அளித்து வெற்றிக்குரிய ஆசி அனைத்தையும் நல்கினாள். அந்த ஒன்பது நாளும் நவராத்திரி ஆகிறது. ஒவ்வொருநாளும் அம்பிகையின் ஒவ்வொரு வடிவத்தையும் அவளுடைய பெருமையை எண்ணிப் போற்றுகிற பக்தனுக்குப் பத்தாவது நாளன்று வெற்றியை நல்கும் விஜயதசமியாக வருகிறாள். மஹாபாரத யுத்தம் ஆரம்பிக்கு முன்பும் கண்ணன் அர்ஜுனனுக்குச் சக்தி உபாசனையின் மேன்மையைக் கூறி அர்ஜுனனை அம்பாள் வழிபாட்டில் ஈடுபடுத்துகிறார். அம்பாள் அருள் பெற்ற பிறகே விஜயன் வெற்றி வாகை சூடினான்.

மாபெரும் ஒளிப் பிழம்பிலிருந்து வந்துள்ள ஒரு தீப்பொறிக்கும் அதன் தன்மைக்கேற்றவாறு சக்தியிருக்கிறது. தீப்பொறியும் அனுகூலமான சூழ்நிலையைப் பயன்படுத்திப் பெரிய நெருப்புப் பிழம்பாக வரமுடியுமன்றோ! நம்முடைய உள்ளத்தில் அமைந்திருக்கிற ஆற்றல் நெருப்புப் பொறி போன்று நமக்கு அற்பமாகத் தோன்றலாம். ஆனால் அதற்குரிய சூழ்நிலை வருகிறபொழுது சாமானியமானவனும் செயற்கரிய காரியத்தைச் செய்து சிறப்படைய முடியும். **We are the human Covering over the Divine** என்றார் விவேகானந்த சுவாமிகள். மானுட சரீரம் என்ற போர்வையைப் போர்த்திய தெய்வம் நாம். நம்மிடத்தில் அளப்பரிய சக்தி இருப்பதாக எண்ண எண்ண ஆற்றல் தானாக வருகிறது. மனிதன் வெறும் சிந்திக்கத் தெரிந்த இயந்திரமல்லன். அமீபா என்ற சிற்றுயிர் நிலையில் இருந்து தெய்வீகப் பண்புகள் வாய்க்கப்பெற்ற ஜீவன்முக்தன் வரை தன்னைத்தானே ஓயாது மாற்றியமைக்கும் தெய்வீகச் சிற்பி மனிதனாவான். மனதை உடையவன் மனிதன் என்று அழைக்கப் படுகிறான். மனதை உடைத்திருந்தால் மட்டும் போதாது. அதை அடக்கி நல்வழியில் திருப்பி ஆக்க பூர்வ காரியங்களில் ஈடுபடுகிற பொழுது அவன் செயற்கரிய காரியங்களைச் செய்துவிடுகிறான். உள்ளம் என்ற ஒன்று நம்மிடம் இருக்கிறது. அது கலங்காது, உறுதியாக, வஜ்ரம் போன்று இருக்கும் வரை உலகில் எந்தச் சக்தியும் நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது. உற்றார் உறவினர் நம்மைக் கைவிட்டாலும், கைப்பொருள் கைநழுவிப்போனாலும் உலகமே நம்மை ஒதுக்கிவிட்டாலும் நம் உள்ளம் மட்டும் உறுதியாக நிலைகுலையாது இருக்குமேயானால் அதன் முன்னணியில் எதுதான் என்ன செய்து விடமுடியும்? அலெக்ஸாண்டர் என்ற கிரேக்க மன்னன் இந்தியாவினுள் புக நினைத்தபோது அவனை எதிர்த்தவன் புருஷோத்தமன் என்ற இந்திய மன்னன். இருவருக்கும் இடையில் ஏற்பட்ட கடும் யுத்தத்தில் புருஷோத்தமன் கைது செய்யப்பட்டான். வெற்றி பெற்ற அலெக்ஸாண்டர் முன்னிலையில் கைது செய்யப்பட்ட போரஸ் மன்னன் கம்பீரமாக நின்றான். கிரேக்க மன்னன் கேட்டான்: "உன்னுடைய ஆட்சி, நாடு, படை நீ உட்பட அனைத்தும் என் வசமாகிவிட்டதை நீ அறிவாயா?" என்றான். அதற்கு இந்திய மன்னன் போரஸ் கொடுத்த மறுமொழி "அரசே! என் நாடு நகரம், ஆட்சி அனைத்தையும் நான் இழந்திருக்கலாம். ஆனால் என் உள்ளத்தை நான் இன்னும் இழக்கவில்லை. உள்ளம் என் வசம் இருக்கும்போது தன்னம்பிக்கை, தைரியம், பேராற்றல் முதலியன அனைத்தும் இருக்கும். இது இருந்து விட்டால் பிறகு பெறவேண்டியது எதையும் இவ்வுலகில் பெற்று விடலாம்" என்றான். அதுதான் நம்முடைய இந்தியப் பண்பு. ஒரு நாளும் தளர்வறியா மனம் தரும் என்று அபிராமிபட்டர் அம்மையைக் குறித்

துப் பாடுகிருர். அம்பாளைச் சார்ந்து இருப்பவர்களுக்கு உறுதியான மனது வந்து வாய்க்கிறது. நெருப்போடு சேருகிற அடுப்புக்கரி நெருப்பு மயமாவது போன்று மாபெரும் சக்தியாகிய பரம்பொருள் சிந்தனையிலேயே ஊறியிருப்பவன் சர்வ சக்தியைப் பெறுகிருன்.

உண்ணுகிற உணவின் மூலம் உடல் வலுப் பெறுகிறது. எண்ணுகிற எண்ணத்தின் மூலம் உள்ளம் உறுதிபெறுகிறது. நாள்தோறும் ஒவ்வொரு கணப்பொழுதும் வந்து, போகிற, தோன்றி மறைகிற எண்ணங்களே நம்மை மாற்றியமைக்கின்றன.

பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தம்தம்
கருமமே கட்டளைக் கல்.

என்பார் வள்ளுவர்.

நம்மில் சிலர் பெருமையோடும், புகழோடும், சிறப்போடும் வாழவும், நம்மில் பலர் வறுமையில் வாடவும், துன்பத்தில் கிடந்து துடித்துச் சொல்லொணுத் துயர்படவும் காரணம் நமக்கு நாமே உண்டுபண்ணிக் கொண்ட நிலைதானே! இவ்வுலகில் யாராவது தனக்குத் தானே துன்பத்தை வரவழைத்துக் கொள்வார்களா? எண்ணத்தைத் தொடர்ந்து செயல் வருகிறது. உள்ளத்தில் ஆக்க பூர்வமான ஒளி மயமான, மகிழ்ச்சி கலந்த பரோபகாரமான நல்லெண்ணங்கள் ஊற்றெடுக்கிறபோது நம் வாழ்வு அவை போன்று மாறியமைகிறது. அதை விடுத்து வெறுப்பு மயமான, பொருமை கலந்த வேற்றுமை, அற்பப்புத்தியோடு கூடிய எண்ணம் உள்ளத்தில் தலையெடுக்கிற பொழுது நம் வாழ்வும் அதற்கேற்றுர் போன்று அறியாமை, வறுமையோடு கூடிய வாழ்வை அமைத்துத் தருகிறது. எண்ணமே செயலாக வடிவெடுப்பதால் உடன்பாட்டு எண்ணங்களையே உள்ளத்தில் வளர்த்து வரவேண்டும். மட்டமான, நம்மைப் பாழ்படுத்துகிற கீழ்த்தரமான எண்ணங்களை எண்ணுவதை விடுத்து மனதை நல்ல எண்ணங்களை எண்ணப் பயிலுவிக்க வேண்டும்.

நாம் இப்போது விஞ்ஞான காலத்தில் வாழ்வதால் நாம் எதையும் விசாரித்துப் பார்க்க நமக்கு உரிமை உண்டு. இப்போது நாட்டில் நேர்மை, நாணயம், கடும் உழைப்பு, பணிவு, உண்மை பேசுதல் முதலிய நற்பண்புகள் குறைந்துகொண்டே வருகின்றன. அரசாங்கம் பண்ணுகிற அராஜகத்தைத் தனி மனிதன் சுட்டிக்காட்டிஞல் அவனுக்கு ஆபத்து என்ற நிலை உருவாகி வருகிறது. உண்மை பேசி நாணயமாக வாழ்கின்றவன் பிழைக்கத் தெரியாதவன் என்று சமுதாயத்தால் எள்ளி நகையாடப்பட்டு ஒதுக்கப்படுகிருன். ஏராளமாக ஊழல் பண்ணும் பித்தலாட்டக்காரர்கள் சமுதாயத்தில் வேண்டியளவு இடம் பெற்றிருக்கிருர்கள். இதையெல்லாம் பார்க்கிற பாமர உள்ளங்கள் நாமும் இவர்களைப் போல் மோசடியில் ஈடுபட்டால்தான் வசதியாக வாழமுடியும் என்று அவசரப்பட்டு முடிவு செய்து விடுகிருர்கள். இவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எந்த வள்ளுவரை வழிகாட்டியாகப் பேசுகிருர்களோ அதே வள்ளுவர் சொன்ன ஒரு குறளை அவர்கள் சிந்திக்கட்டும்.

இலர் பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

மாதம் மும்மாரி மழை பொழிந்த இந்த நாட்டிலே பருவத்தில் பெய்ய வேண்டிய மழை பெய்வது இல்லை. அதை முன்னிட்டு வறுமை, பசி, பட்டினி, தற்கொலை, நிகழ்கிறது. முன்பெல்லாம் கடவுளுக்குப் பயந்து தர்மத்திற்கு, சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு நேர்மையாக வாழ்ந்தனர்.ஆனல் இன்றோ கடவுளே இல்லை என்றும் பொய்பேசி, ஏமாற்றிப் பணம் சம்பாதிக்கலாம் என்றுவாழ்கின்றகூட்டம் பெருகி வருகிறது. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். இறைவனிடமிருந்து வந்துள்ள பஞ்சபூதங்களில் ஒன்ருகிய நீர் இல்லாது நாட்டில் ஆங்காங்கே கடும் வறட்சி ஏற்பட்டு மக்கள் படும் அவதி இவ்வளவு அவ்வளவு அல்ல. இதைப் பார்த்தாவது நம்மைத் திருத்த முயல்வோம். இல்லை யென்ருல் துவாரகையில் யாதவர்கள் குடித்துக் கும்மாளமிட்டு ஒருவருக்கொருவர் அநியாயமாகக் குத்திக்கொண்டு செத்தது போன்ற நிலைதான் வரும். ஆகவே ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே சூழ்க என்று சங்கல்பித்து இனியாவது உணர்ந்து உய்வடைவோம் எனத் தீர்மானிப்போம். அன்னையின் அருளைச் சார்ந்திருந்து சிறந்த திண்ணியர்களாக மாறி நாமும் உயர்ந்து நாட்டையும் உயர்த்துவோமாக.

அறவாழ்வும் ஆன்மீகச் சிந்தனையும்

(ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் 12—4—85 அன்று குன்னூர் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[270 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அன்னையின் அருளைவேண்டி அல்லும் பகலும் அழுது புலம்பினர் ஸ்ரீ ராமகிருஷ்ணர். தேவியின் திருவருள் சித்திக்காவிடில் தாம் உயிர் வாழ்ந்து என்ன பயன் என்று அவர் பரிதவித்தார். இவ்வாறு அழுது, அழுது முடிவில் அவர் தெய்வக்காட்சி காணப்பெற்றார். அதன் பின்னர் எல்லையில்லாத பேரின்ப வெள்ளத்தில் அவர் திளைத்திருந்தார். அவரது வாழ்வின் ஒவ்வொரு கணமும் அறவாழ்வுக்கு இலக்கணமாய் அமைந்தது. அவரது சிந்தனையும் ஒவ்வொரு கணமும் ஆன்மீகச் சிந்தனையாகவே அமைந்தது. இவ்வாறு ஞானவான்கள் தாங்கள் அழுவதின் மூலமாகவும் இறைவனுடைய அருளைப் பெற்றார்கள்.

"கடலின் மடைவிண்டதென்ன-இருகண்களும் ஆனந்தக் கண்ணீர் சொரிய, உடலும் புளகிதமாக எனது உள்ளம் உருக உபாயஞ் செய்தாண்டி" என்று தாயுமானவரும், "மூளாத்தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி ஆளாயிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால் வாளாங்கிருப்பீர்" என்று சுந்தரரும், "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது, வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது, நாதன் நாமம் நமச்சிவாயவே" என்று சம்பந்தரும், "உள்ளம் தாள் நின்று உச்சியளவு நெஞ்சாய் உருகாதால் உடம்பு எல்லாம் கண்ணாய் அண்ணா வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்ஆம் கண் இணையும் மரம் ஆம் தீவினையினேற்கே" என்று மணிவாசகரும் அழுகையின் மகிமையைக் குறித்து அருளியிருக்கின்றார்கள். நெஞ்சம் நெகிழ்ந்து, உடல் உருகி, ஊனும் கரையுமாறு தன்னை மறந்து சொரிகின்ற கண்ணீர் பிறவிப் பிணிக்கு மூவாமருந்து ஆகும். பிறர் படுகின்ற துன்பங்களைச் சகியாது விடுகின்ற கண்ணீரும், "நீ துன்பத்தைக் கொடுத்தாலும் பாதகமில்லை, உலக இன்பங்கள் எனக்கு வேண்டாம், உன்னுடைய திருவடி நிழலே எனது இலட்சியம், அதை அடையும் வரை என் அழுகை ஓயாது" என்று அருளாளர்கள் விடுகின்ற கண்ணீரும், அகத்தில் அருட்காட்சி கிடைக்கப்பெற்றவர்கள் பொழிகின்ற ஆனந்தக் கண்ணீரும் தெய்வ சாந்நித்யம் பொருந்தியனவாகும். சுடுகின்ற அளவு பொன்னின் ஒளி அதிகரிக்கும். துன்பத்தில் அழுந்த, அழுந்த நாம் திருந்தி அமைகிறோம். அப்பொழுது விவேகமும், வைராக்கியமும் இயல்பாய் வந்து அமையும். பக்தன் விடுகின்ற கண்ணீர் மனமாசுகளைக் கரைத்து உள்ளத்தைத் தூயதாக்கும். இவ்வாறு நம்மை அழச்செய்து ஆட்கொள்ளும் சிவம் பர்க: எனப் படுகிறார். காயத்ரீ மந்த்ரம் ஜபிக்கையில் சுற்றுச் சூழ்நிலைகளை மறந்து உள்ளம் காயத்ரீயின் அருட் சக்தியை நினைந்து உருகவேண்டும். இயந்திரம்போன்று வாய் மட்டும் ஓயாது மந்திரத்தை முணுமுணுத்தல், புத்தியும் சிந்தையும் நாள் செல்லச் செல்ல சிறிதளவும் திருந்தி அமையாதிருத்தல், பொறி புலன்கள் தம் போக்கில் அலைபாய்ந்திருத்தல், நாள் செல்லச் செல்ல இறைநாட்டத்தில் ஆர்வம் அதிகரிக்காமல் இருத்தல் ஆகிய குறைபாடுகளை உடையவர்கள் உண்மையில் காயத்ரீ ஜபம் செய்தவர்கள் ஆகமாட்டார்கள். அவர்கள் சில வரிகளைத் திருப்பித் திருப்பி மனப்பாடம் பண்ணுவதாகவே அது அமையும்.

உணர்ச்சி ஊட்டுகின்ற, எழுச்சியைத் தருகின்ற, நம் உயிரைத் தூண்டி இயக்குகின்ற பொருள் எதுவோ அந்தப் பரம்பொருளுக்கு ஸவித்ரு என்று பெயர். அண்டத்தில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் அது ஆதாரமானது. சுயம்பிரகாசமான சூரியன் தன்னைத் தானே விளக்குகிறான். அவன் அருளுகின்ற பேரொளியினால் உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் காணவும், அறியவும், பயன்படுத்தவும் இயலுகிறது. அதேவிதத்தில் சுயஞ்ஜோதியாய்த் திகழும் பரம்பொருளின் அருளால் நாம் பிரபஞ்ச வாழ்க்கையில் எல்லாத் தளைகளையும் அறுத்தெறிந்து விடு பேற்றினை அடையலாகும். ஸவித்ரு என்ற சொல்

லுக்குத் தூண்டுதல் தருபவன், தூக்கத்தி னின்று தட்டியெழுப்புபவன், உயிரூட்டுபவன், காட்சிக்கு எட்டாது மறைந்தநிலையில் இருக்கும் கதிரவன், அகிலத்துக்கு ஆதரவு அளிப்பவன், பாபத்தினின்று விடுவிப்பவன் என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். இங்ஙனம் ஸவித்ரு என்ற நாமம் புறவுலகிலுள்ள சூரியனேயும், அகவுலகிலுள்ள ஆத்ம சொருபத்தையும் ஒருங்கே குறிப்பிடுகின்றது. சிவ என்பது ஆண்பால். சிவா என்பது பெண்பால். அது போன்று ஸவித்ரு என்பது ஆண்பால், ஸாவித்ரீ என்பது பெண்பால். காயத்ரீ, ஸாவித்ரீ என்பன சக்தி தெய்வத்துக்கு உரிய திருநாமங்களாகும். கல்விக் கடவுளான ஸரஸ்வதியையும் இந்தப்பதம் குறிக்கும்.

இவ்வாறு இந்தத் திவ்விய மந்த்ரத்தில் ஸவித்ரு, தேவ:, பர்க: ஆகிய மூன்று பெயர்ச் சொற்களும், வரேண்யம், தீமஹி, ப்ரசோதயாத் ஆகிய மூன்று வினைச் சொற்களும் வந்துள்ளன. இவற்றில் பெயர்ச் சொற்களை நாம் முற்பகுதியில் ஆராய்ந்தோம். இனி, வினைச் சொற்களில் வரேண்யம் என்ற பதம் விளக்குதல், வர்ணித்தல் என்று பொருள்படும். ஆழ்ந்த ஜபத்தில் ஈடுபடும் அளவு அனைத்திற்கும் இறைவனே கர்த்தா, நாம் கர்த்தாக்கள் ஆகமாட்டோம் என்பதை உணரலாம். நமக்கு ஏற்படும் சோர்வு, துக்கம் ஆகியவற்றிற்கு நம்மிடத்திலுள்ள அகங்காரமே காரணமாகும். நாம் இல்லாவிடில் எந்தக் காரியமும் நிகழ முடியாது என்ற எண்ணமே நமது துன்பங்களுக்கு முதற்காரணம். நம்மை நம்பி இவ்வுலகம் இயங்கவில்லை; "நம்மை ஒழுங்குபடுத்திக் கொள்ளவே நாம் இவ்வுலகில் பிறவி எடுத்தோம்; உலகைத் திருத்துவது நமது பிறவி நோக்கம் அன்று" என்ற உண்மையை நாம் முதலில் உணரவேண்டும்.

குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் அர்ஜுனன் "கிருஷ்ணா! என்னால் போர்புரிய இயலாது. எனக்கு உற்றவர்களை நான் கொலை செய்யமாட்டேன்" என்று கூறித் தளர்வுடன் தேர்த்தட்டில் சாய்ந்தான். ஸ்ரீ கிருஷ்ணன் "அர்ஜுனா! இத்தகைய சோர்வும், மனத்தளர்ச்சியும் உனக்கு எங்கிருந்து வந்தன? கருமங்களுக்கு நீயே அதிகாரி என்று தவறாக எண்ணுகிறாய். உண்மையில் நீ கருவி மாத்திரமே. பூபாரம் தீர்க்கவும், தர்மத்தை நிலை நாட்டவும் நான் இந்தத் திட்டத்தை வகுத்துள்ளேன். இதில் செய்வேன், செய்ய இயலாது என்றெல்லாம் சொல்வதற்கு உனக்குச் சுதந்திரம் இல்லை. நீ கர்மத்தைச் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றாய். பலனைப்பற்றிச் சிந்தியாது கர்மத்தைச் செய். கர்மம் செய்வதன் மூலம் உன் வீரியத்தையும், க்ஷத்திரியதர்மத்தையும் நீ நிலைநாட்ட வேண்டும். எனவே காண்டீபத்தைக் கையில் எடுத்து உடனே போரைத் துவக்கு" என்று ஆணையிட்டார்.

இவ்வாறு கீதோபதேசம் கேட்ட பின் அர்ஜுனன் அடியோடு மாறிவிட்டான். புத்துணர்ச்சி பொங்கப் பூரிப்புடன் அவன் பகவானைப் பார்த்துப் பகர்வானானான்: "உன்னுடைய கருணையினால் எனக்கு மயக்கம் தொலைந்தது. ஐயங்கள் அகன்று போயின. மாயையிலிருந்து நான் விடுபட்டு விட்டேன். இப்பொழுது நான் உறுதியாயிருக்கிறேன். நான் யார் என்பதை இப்போது ஞாபகப்படுத்திக் கொண்டேன். இனி நீ சொல்லியதைச் சொல்லியவாறு செய்து முடிப்பேன்."

नष्टो मोहः स्मृतिर्लब्धा त्वत्प्रसादान्मयाऽच्युत ।
स्थितोऽस्मि गतसन्देहः करिष्ये वचनं तव ॥

"நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர் லப்தா
த்வத் ப்ரஸாதான்மயா அச்யுத
ஸ்திதோ அஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே
வசனம் தவ"

இதுவே முடிந்தநிலை. தன்னைப் பண்படுத்திக் கொள்ளுதல் என்ற இந்த வாழ்க்கைத் தவத்தில் அர்ஜுனன் வெற்றிபெற்றான். எனவே அவன் ஏற்றுக்கொண்ட யுத்தம் புரிதல் என்ற கடமையையும் சரியாகச் செய்து முடித்தான். இவ்விதம் வாழ்க்கையிலும், சாதனைப் பயிற்சியிலும் ஈசனுடைய அருள் இருந்தால் ஒழிய ஒருவராலும் வெற்றி பெற முடியாது. தெய்வத்தின் துணை இல்லாமல் மாயை என்ற கடலை யாராலும் கடக்க இயலாது. உணர்வினால் நாம் இன்னும் அர்ஜுனன் நிலையை எட்டவில்லை. 'நான் யார்?' என்ற கேள்விக்கு விடை என்ன? 'நான் அகண்ட சத் சித் ஆனந்த சொரூபம். அதுவே எனது நிஜ வடிவம்' என்பதுதான் பதில். நாம் கருவி; அவர் கர்த்தா—

இந்த உண்மையை உணர்ந்துகொள்ளத் தக்க ஞானம் நமக்கு வாய்க்க வேண்டும். காயத்ரி ஜபத்தினல் நாம் அத்தகைய ஞானம் கைவரப் பெறலாம். அகண்டாகாரமாயிருக்கும் அறிவு சொரூபமே அனைத்தையும் இயக்குகிறது. இந்த ஞானத்தை அனுபவபூர்வமாக நாம் பெற லாம். அப்பொழுது மனம் அழிந்து சொரூபத் தில் நாம் ஒன்ருகக்கலந்து விடுகின்ருேம். இறைவனின் திருவருளுக்குப் பாத்திரர் ஆன வர்கள் யாவரேயாயினும் அத்தகைய பெருநிலை அடையப் பெறுவது உறுதி. அத்தகைய திரு வருளை வேண்டி நாம் பகவானை நாள்தோறும் பிரார்த்தனை செய்யவேண்டும். இதனை விளக்குகின்ற கீதா ஸ்லோகம் வருமாறு:

दैवी ह्येषा गुणमयी मम माया दुरत्यया ।
मामेव ये प्रपद्यन्ते मायामेतां तरन्ति ते ॥

தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா
துரத்யயா
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயா மேதாம்
தரந்தி தே

"குணங்களால் ஆகிய என்னுடைய இந்த தேவ மாயையானது உண்மையில் தாண்ட முடியாதது; யார் என்னையே சரணடைகின்ருர்களோ அவர்கள் இந்த மாயையைத் தாண்டுகின்றனர்." தெய்வத்தைச் சரணடைந்து கடக்க முடியாத மாயையைக் கடந்து வெற்றி பெறுவதே மனிதப் பிறவி எடுத்ததன் நோக்க மாகும். புற உலகில் நம் வாழ்க்கைக்கு ஆதாரமாய் விளங்குகின்ற சூரியனைப் போற்று கின்ருேம். அக உலகில் ஆன்ம விளக்காகத் துலங்கிடும் பரம்பொருளைப் போற்றுகின்ருேம். அங்ஙனம் உள்ளத்தினுள் இருக்கும் ஞான சூரியனைப் போற்றவல்லவர்கள் துவிஜர் அல்லது இருபிறப்பாளர்கள் ஆகிருர்கள்; உட லோடு எடுத்த பிறப்பு ஒன்று; அகத்தில் உள்ள அஞ்ஞானம் நீங்கித் தான் ஆத்ம சொரூ பம் என்ற பேருண்மையை உய்த்துணர்தல் மறுபிறவிக்குச் சமானம் ஆகிறது. எனவே நாதப்பிரம்மம் ஆகிய இறைவனைப் பண்ணேடு கலந்து முறைப்படி காயத்ரீ ஓதி நாம் நம் உள்ளங்களில் எழுந்தருளப் பண்ணவேண்டும்.

நாம் அவரை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தால் அவர் பத்தடி நம்மை நோக்கி வரு கின்ருர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது சாதனையில் இதனை நிதரிசனமாக நிரூபித்தார். நமது பிரயத்தனமும், தெய்வகிருபையும் இரண்டும் இணைந்து நமக்கு ஞானத்தை நல்குகின்றன. தெய்வத்தை வழிபட்டு அந்த ஞானத்தை நாம் பெறவேண்டும். இதுவே வரேண்யம் என்ற சொல்லால் விளக்கப்படுகிறது. வெள்ளிப் பாத்திரம் விளக்க விளக்கப் பளிச்சென்று துலங்குகிறது. அவ்விதமே தெய்வத்தைப்பற்றிய விளக்கங்களைக் கேட்டுக்கேட்டு மனம் பண்படுகிறது. பரமனைப்பற்றிய விளக்கம் பொருள் சேர் புகழ் எனப்படுகிறது. தெய் வத்தை இடையருது புகழ்ந்துகொண்டிருக்க வேண்டும் என்னும் கோட்பாட்டை வரேண் யம் என்ற பதம் குறிக்கிறது.

அருளாளர்களும், சான்ருேர்களும் தெய்வத் தையே என்றும் துதி செய்தார்கள். கடவுளின் அருளையன்றி வேறு எதையும் அவர்கள் நாடியதில்லை. தெய்வத்தைக் குறித்துச் செய் யப்படுகின்ற சிந்தனை 'தீமஹி' எனப்படு கிறது. பேசுதல் நாவின் செயல். தியானிப் பது உள்ளத்தின் செயல். அக்பர் சக்கரவர்த்தி யின் காலத்தில் தான்சேன் என்ற இசைவல்லு நர் இருந்தார். அவருடைய இனிய கானத் தில் லயித்துச் சக்கரவர்த்தி மிகவும் இன்பமுற் ருர். அப்பொழுது தான்சேன் தமது குருநாத ரின் தெய்வீக இசையின் மேன்மையைப் பற் றிப் புகழ்ந்து கூறினர். அக்பரும் தான்சேனும் அவர் இருக்கும் இடம் நாடிச் சென்று அந்தத் தெய்வீக இசையைக் கேட்டுப் பேரின்ப உணர்ச்சியை அனுபவித்தார்கள். மறுநாள் தான்சேனைத் தமது அரண்மனையில் அதே பாடலைப்பாடும்படிகோரினர் அக்பர். ஆனல் முதல் நாள் பெற்ற தெய்வீக அனுபவம் அப் பொழுது கிடைக்கவில்லை. தான்சேனைக் காரணம் கேட்டார் சக்கரவர்த்தி. "என் குரு நாதர் இறைவனை மகிழ்விக்கப் பாடினர். ஆகவே அது மகிமை பொருந்தி இருந்தது. நான் தங்களை மகிழ்விக்கப் பாடினேன். எனவே அவருடைய பாடலுக்கு என்பாடல் எப்படிச் சமமாகும்?" என்று கூறினர் தான் சேன். எனவே தெய்வத்தைப் புகழ்ந்து போற்றுவதால் நாம் பெறற்கு அரிய பேறுகளை யெல்லாம் பெறலாம்.

தெய்வத்தைக் குறித்த சிந்தனை தீமஹி

எனப்படுகிறது. அவ்விதம் பிரார்த்தனை பண்ணுகிற சாதகனுக்கு இறைவன் நல்லறிவைத் தூண்டிவிடுகின்றார். அத்தகைய தூண்டுதல் பிரசோதயாத் எனப்படுகிறது. அவரவர் பிரயத்தனத்துக்கு ஏற்றவாறு தெய்வம் அனுக்கிரகம் பண்ணுகிறார். விளக்கு வெளிச்சத்தில் ஒருவன் இராமாயணம் வாசிக்கின்றான். மற்றொருவன் பொய்ப்பத்திரம் எழுதுகிறான். தீபம் சாட்சி மாத்திரமாக இருந்துகொண்டு அங்குச் செயலைத் தூண்டுகின்றது. பசி என்ற தூண்டுதல் இருந்தால் குழந்தை பால் வேண்டி அழுகிறது. உடனே தாயின் அரவணைப்பைப் பெற்று அமைதி அடைகிறது. அதுபோன்று அருள்தாகத்தினால் தூண்டப்பட்ட பக்தனுக்கு இறைவனின் கருணையினால் அறிவு ஒளி உண்டாகிறது. குழந்தை வேற்றாரிடம் ஒட்டுவதில்லை. தாயையே அது சரணடைந்திருக்கிறது. இதே பாங்கில் தம்மைச் சரணடைந்த கிரீசரைப் பரமஹம்சர் மேலாம் உயர்நிலை அடையத் தூண்டி வந்தார். அதுபோன்று சாதகனுக்கும் மனது பண்பட்டு வரவரக் கேடுகளிலிருந்து விலகுதல், நல்லதின்கண் நாட்டம் செலுத்துதல் ஆகியன நிகழுகின்றன. காலப்போக்கில் தெய்வ அனுக்கிரகத்தின் தூண்டுதல் காரணமாக உடல் ஞாபகம் போய்ப் பரத்தைப் பற்றிய ஞாபகம் அதிகரிக்கும். அப்பொழுது ஆன்ம போதம் விழித்தெழுந்து பொருள் நாட்டம் அறவேநீங்கி அருள் நாட்டம் மேலோங்குகிறது. "இறைவா, உன்னை மறந்தால் உயிர் வாழேன்" என்று உள்ளம் உறுதியுடன் இறைச் சிந்தனையில் ஈடுபடுகிறது. அருள் நாட்டம் மேலோங்கிய காரணத்தால் சுவாமி விவேகானந்தர்சான்றோர்கள் பலரையும் நாடிச் சென்று "நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா? நீங்கள் எனக்குக் கடவுளைக் காட்டமுடியுமா?" என்று வினவினர். முடிவில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் அவருடைய ஐயங்களைப் போக்கி அவர் வேண்டிய தெய்விகப் பெருநிலையையும் அவருக்குத் தந்து அவரை ஆட்கொண்டார்.

காயத்ரீ ஜபம் முறையாகச் செய்பவர்களுக்கு இத்தகைய பண்பாடும், பக்தியும் நாள் செல்லச் செல்ல அதிகரிக்கும். மனிதன் தன்னை முற்றிலும் மாற்றி அமைத்துக்கொள்வதற்கு இதுவே உற்றதோர் உபாயமாகும். இஷ்ட தெய்வத்திற்கு வந்தனை வழிபாடுகளைச் செய்யும் முன்னால் நாம் காயத்ரீ ஜபம் பண்ணலாம். நமது அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் காயத்ரீ ஜபம் செய்துவிட்டுத் தொடங்கவேண்டும். காயத்ரீ மந்த்ரத்தைத் தனியாகவும் ஜபிக்கலாம்; பலர் ஒன்றுகூடியும் ஜபிக்கலாம். பலர் ஒன்றுகூடி ஜபிக்கும் பொழுது அதிகப் பலன் உண்டாகும். தேர் இழுப்பதில் பலர் ஒன்று கூடுகின்றனர். பலர் கூடி இழுக்கும் பொழுது அசையாத தேரும் அசைய ஆரம்பிக்கிறது. தேர் இழுப்பதில் உடல் சக்தியெல்லாம் ஒன்று திரட்டப்படுகிறது. பலர் கூடி ஐக்கிய வழிபாடு செய்யும்பொழுது பலருடைய மனோசக்தி ஒன்று திரட்டப்படுகிறது. காயத்ரீ மந்த்ரத்தில் பலருடைய மனோசக்தியும் ஒன்று சேரும்பொழுது அம்மந்த்ரத்துக்கு சக்தி அதிகரிக்கிறது. பலரும் ஒன்று கூடிக் காயத்ரீ மந்திரத்தை ஜபிக்கும்பொழுது விரைவில் மனம் தூய்மையடைந்து சித்சொரூபமாக மாறியமைகிறது. இவ்விதம் காயத்ரீ மந்த்ரத்தின் மூலம் நம் வாழ்வைப் பெருவாழ்வாக மாற்றியமைக்க எல்லாம் வல்ல ஈசன் நமக்குத் துணை புரிவாராக.

(முற்றும்)

செய்திகள்

நிகர்பவை:

18—9—85 புதன்கிழமையன்று விநாயக சதுர்த்தியை முன்னிட்டு ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் பகல் பன்னிரண்டு மணி நேரம் அகண்ட நாமபஜனையும், பகல் 11 மணியிலிருந்து 12 மணி வரை ஐக்கிய வணக்கமும் செய்வார்கள்; அன்று இரவு 7 மணிக்கு மேல் மாணவர்கள் குழுக்களாகச் சேர்ந்து விநாயகர் பூஜை செய்து விநாயகச்சதுர்த்தியைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

29—9—85 ஞாயிறு அன்று பள்ளத்தூர் ஸ்ரீ சாரதா சேவாச்ரமத்தில் ஸ்ரீமத் சுவாமி சுஹானந்தர் அவர்கள் காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை அந்தர்யோகம் நடாத்துவார்கள். பகல் உணவுக்கு ரூ. 2-00 நேரில் செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

சக்திபூஜை அந்தர்யோகம்

ஸ்ரீ சாரதா ஸமிதி, 1 c. மடம் சந்து

லக்ஷ்மீ நாராயணபுரம் அக்ரஹாரம், மதுரை-625 001.

ஐப்பசி திங்கள் 2, 3ம் நாள் வெள்ளி, சனிக்கிழமைகளில் (18, 19—10—85)

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

தலைமையில் நடைபெறும்.

அன்புடையீர்,

அக்டோபர் மாதம் 18, 19 ஆகிய இரு தினங்களில் மேற்கண்ட விலாசத்தில் உள்ள ஸ்ரீ சாரதா ஸமிதியில் கீழ்க்கண்ட முறைப்படி சக்தி பூஜை அந்தர்யோகம் நடைபெறும். தாய்மார்கள் மட்டும் இரண்டு நாள் இங்கு தங்கியிருந்து கலந்துகொள்ளலாம். உணவுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 8-00 வீதம் செலுத்தவேண்டும். கலந்துகொள்ள விரும்புகிறவர்கள் கடிதம் மூலம் அறிவித்துவிட்டு நேரில் தொகையைச் செலுத்தலாம். அன்பர்கள் நிகழ்ச்சிகளில் மட்டும் கலந்துகொள்ளலாம். அன்பர்கள் முன்கூட்டி தெரிவித்தால் பகல் உணவு மட்டும் ஏற்பாடு செய்யப்படும். அதற்கு ரூ. 3-00 செலுத்தவேண்டும். அமைதியைக்காக்க 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுமிகளும் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும் இதில் சேர்த்துக்கொள்ளபடமாட்டார்கள். விருப்பமுள்ளவர்கள் இதில் கலந்துகொண்டு அம்பாளின் திருவருளுக்குப் பாத்திரமாவார்களாக.

நிகழ்ச்சி நிரல்

காலை

மணிமுதல்	மணிவரை	
8-45	9-00	பிரார்த்தனை, தேவி மஹாத்மியம்
9-00	10-00	நாம ஜபம்
10-00	11-00	உபந்யாசம்
11-00	12-30	ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம அர்ச்சனை, ஆரதி
12-30	3-00	உணவு, ஓய்வு

மாலை

மணிமுதல்	மணிவரை	
3-00	3-30	நாம ஜபம்
3-30	4-30	உபந்யாசம்
4-30	5-15	சிற்றுண்டி
5-15	6-15	ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம அர்ச்சனை
6-15	6-45	ஆரதி தியானம் மங்களம்

திருப்பராய்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தில்

அந்தர்யோகம்

1985ஆம் ஆண்டு நவராத்திரி பூஜையின் கடைசி மூன்று தினங்களாகிய அக்டோபர் மாதம் 20, 21, 22 ஆகிய தேதிகளில் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி இங்கு அந்தர்யோகம் நடைபெறும். இதில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் அக்டோபர் மாதம் 19ஆம் தேதி சனிக்கிழமை இரவே நேரில் நாள் ஒன்றுக்கு ரூ. 8-00 வீதம் ரூ. 24-00 உணவுக்காகச் செலுத்திப் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளவேண்டும். தாய்மார்களுக்கும் இதில் இடம் உண்டு. பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை	6	மணி முதல்	7	மணி வரை	தியானம்
,,	8	,,	9	,,	பஜனை
,,	9	,,	10	,,	லலிதா நாம விளக்க உபந்யாசம்
,,	11	,,	12	,,	அர்ச்சனை
மாலை	2	,,	3	,,	லலிதா நாம விளக்க உபந்யாசம்
,,	5	,,	6	,,	அர்ச்சனை
,,	6	,,	7	,,	தியானம்
இரவு	8	,,	9	,,	பஜனை

தியானம், லலிதா நாம விளக்க உபந்யாசம், அர்ச்சனை, பஜனை இந்த நிகழ்ச்சிகள் நடைபெறும் நேரங்கள் போக பாக்கியிருக்கும் 16 மணி நேரத்தில் இடைவிடாது நாமஜபம் நடந்துகொண்டிருக்கும். அந்தர்யோகத்தில் கலந்துகொள்ளும் அன்பர்கள் ஒவ்வொருவரும் காலையில் ஒருமணி நேரமும் மாலையில் ஒரு மணி நேரமும் அகண்ட நாம பஜனையில் கலந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இரவு 10 மணி முதல் மாலை 4 மணி வரையில் மாணவர்கள் செய்யும் நாம பஜனையில் அன்பர்கள் தங்களுக்கு வசதிப்பட்டால் கலந்துகொள்ளலாம். தாய்மார்கள் இரவு 10 மணிமுதல் காலை 6 மணி வரை நடைபெறும் நாம ஜபத்தில் கலந்துகொள்ள மாட்டார்கள்.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.